# කාර්යසාධන වාර්තාව
# செயற்திறன் அறிக்கை
# Performance Report
# 2018



**අග්‍රාමාත්‍ය කාර්යාලය**
**பிரதம அமைச்சர் அலுவலகம்**
**Prime Minister's Office**

# செயற்திறன் அறிக்கை

# 2018


**பிரதம அமைச்சர் அலுவலகம்**

**இல.58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை**

**கொழும்பு 07**

**தொலை பேசி: 011-2575317**
**பெக்ஸ்: 011-2574143**
**மின்னஞ்சல்:** info@pmoffice.gov.lk
**இணையத்தளம்:** www.pmoffice.gov.lk

# பொருளடக்கம்


**தலைப்பு** **பக்க எண்**

**1. அறிமுகம் ........ 1**

1.1. தூரநோக்கு ........ 3

1.2. செயற்பணி ........ 3

1.3. அலுவல்கள் ........ 3 - 4

**2. கொள்கை உருவாக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ........ 5**

2.1. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு ........ 7 - 8

2.1.1 செயற்திறன் பின்னூட்டல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள் ........ 8

2.2. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி துரித வேலைத் திட்டம் ........ 9

2.3. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின சிபாரிசுகளை ஒன்றிணைப்பதற்கான அமைச்சரவைக் குழு ........ 10 - 11

2.4. தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் 2017 - 2021 ........ 12 - 13

2.5. கொள்கை உருவாக்கல் அலுவலகம் ........ 14-15

2.6. மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன கருத் திட்ட அலுவலகம் ........ 16

2.7. ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்புச் செயலகம ........ 17-20

2.8. தேசிய ஊடக மத்திய நிலையம ........ 20 - 21

2.9. அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்பட்டுள்ள தாமதங்களை இனங்கண்டுகொள்வதற்கான அமைச்சரவை உப குழு ........ 21 - 22

2.10. வட மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் விசேட பிரிவு ........ 22 – 23

2.11. செயற்திட்ட மீளாய்வு மற்றும் ஒருங்கிணைப்புக் கூட்டம் ........ 23

**3. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு ........ 25**

3.1. பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள ........ 27

3.1.1. சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட இலங்கை முதலீட்டு மாநாடு 2018 மார்ச் ........ 27- 28

3.1.2. சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட உலக நகர மாநாடு - 2018 ஜூலை ........ 28-29

3.1.3. இந்து சமுத்திர மாநாடு, வியட்நாமின் ஹெனோய் நகரம் 2018 ஆகஸ்ட், ........ 29 - 31

3.1.4. தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் உலக பொருளாதார மாநாடு, வியட்நாம் - 2018 செப்டம்பர் ........ 31 – 33

**தலைப்பு** **பக்க எண்**


3.1.5. நோர்வே நாட்டுக்கான உத்தியோகபூர்வ விஜயம் 2018 ஒக்டோபர் ............ 34

3.1.6. ஐக். இராச்சியத்திற்கான உத்தியோகபூர்வ விஜயம் 2018 ஒக்டோபர் ............ 35

3.1.7. இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் - 2018 க்டோபர ............ 35

3.2. பிரதம அமைச்சர் அவர்கள் சந்தித்த இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள ............ 37 - 39

**4. பாராளுமன்றம் மற்றும் சட்ட ரீதியான அலுவல்கள ............ 41**

4.1. பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் சட்ட அலுவல்கள் பிரிவு ............ 43

4.1.1. அமைச்சரவை நிருபங்கள் மற்றும் அமைச்சரவைக் குறிப்புக்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல ............ 43

4.1.2. பிரேரணை அங்கீகாரங்கள் ............ 43 – 44

4.1.3. சட்ட அலுவல்களுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள் ............ 44 – 46

4.1.4. வழக்குகள் தொடர்பான அலுவல்கள ............ 46

4.1.5. பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் அளித்தல ............ 46 – 47

4.1.6. ஆண்டறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல் ............ 47 - 48

**5. தேசிய நல்லிணக்கம், ஊழியர் நலனோம்புகை மற்றும் மத அலுவல்கள் ............ 49**

5.1. தேசிய நல்லிணக்கம் ............ 51

5.1.1. நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகம ............ 51 - 53

5.2. ஊழியர் நலனோம்புகை ............ 53

5.2.1. இரத்தம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் ............ 53 – 54

5.2.2. நலனோம்புகை ............ 54

5.3. மதம் சார்ந்த நிகழ்ச்சிகள் ............ 55

5.3.1. தைப்பொங்கல் பண்டிகை ............ 55

5.3.2. கொழும்பு நவம் பெரஹரா ............ 56

5.3.3. புனித தாதுப் பொருட்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்கள் காட்சிப்படுத்தல ............ 56 – 58

5.3.4. புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவம் ............ 58 – 59

5.3.5. கொள்ளுப்பிட்டி, வாலுக்காராம விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா ............ 60

5.3.6. இப்தார் வைபவம் ............ 61

**தலைப்பு** **பக்க எண்**


**6. பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல .......... 63**

6.1. பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள் குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல ........ 65 – 68

6.2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள் .......... 69

**7. தாபன அலுவல்கள் .......... 71**

7.1. மனித வளங்கள் அபிவிருத்தி .......... 73 – 75

7.2. உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல .......... 76

7.3. பணியாட் தொகுதி பிரதானி அலுவலகம .......... 77

**8. நிதிசார் முன்னேற்றம் .......... 79**

8.1 நிதிசார் முன்னேற்றம .......... 81

# 01. அறிமுகம்

### 1.1 தூரநோக்கு

“சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கிமிக்கதோர் இலங்கை”

### 1.2 செயற்பணி

“இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றிற்கான தலைமைத்துவத்தை வழங்குதல்.”

### 1.3 அலுவல்கள்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பிரதான அலுவல், இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ அலுவல்களை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதாகும்.

அத்துடன், அரசாங்கத்தின் தேர்தல் பிரகடனமான **“60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐந்து அம்ச செயற்பாடு”** இன் பிரகாரம்,

- தேசிய பொருளாதாரத்தை விருத்தி செய்தல்
- ஊழலை பூண்டோடு ஒழித்தல்
- சுதந்திரத்தை உறுதி செய்தல்
- உட்கட்மைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்
- கல்வியறிவை மேம்படுத்தல்

போன்ற அலுவல்களை செயற்படுத்துவதற்காக இந்த அலுவலகம் ஒத்துழைப்பு வழங்கும்.
மேலும்,

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்.
- கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கௌரவ பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்கு பதில்களை தயாரித்தல்.
- கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களுக்கு வெளிநாட்டு தூதுக் குழுக்கள், வெளி நாட்டு தூதரக சேவை அதிகாரிகளுடன் தொடர்புகளை பேணி வருவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.

- கௌரவ பிரதமரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்
- கௌரவ பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- விசேட சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடாத்துதல்.
- கௌரவ பிரதமரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அலரி மாளிகை, பிரதம அமைச்சர் அலுவலகம், கௌரவ பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

# 02. கொள்கை உருவாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

## 2.1. பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு

பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவுக்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து பொருத்தமான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக பிரதம அமைச்சரால் 2015.10.09 ஆம் திகதி முதல் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவை நியமிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தப் பொருளாதாரத் துறைக்கும் கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்கும் முக்கிய நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் இக் குழுவின் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**குழுவின் அலுவல்கள்;**

1) பொருளாதார அலுவல்கள், அரச நிதிசார் கொள்கைகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை நிருபங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆய்வு செய்து அது தொடர்பாக பரிந்துரைகளை பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பித்தல்.
2) தனியார் துறை முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்படும் பல்வேறு செயற் திட்ட அறிக்கைகள் தொடர்பாக பொருத்தமான கொள்கை ரீதியிலான வழிகாட்டலை வழங்குதல்.
3) பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாக தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவின் கவனத்திற்காக அவற்றை சமர்ப்பித்தல்.
4) பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழு மற்றும் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பான மேற்பார்வை அலுவல்.

2018.01.01 ஆம் திகதி முதல் 2018.03.27 வரை இக் குழுவின் 18 கூட்டங்கள் நடாத்தப்படுள்ளது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினால் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பொருளாதார முகாமைத்துவம் பற்றிய அமைச்சரவைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை நிருபங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஏனைய அரச நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையின் 194 கோரிக்கைகளுக்கு இக் குழுவினால் அவதானிப்பு மற்றும் சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது.
அது தவிர இந்தக் குழுவின் ஊடாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கான பல்வேறு கொள்கைகளை அறிமுகஞ் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சிறந்த சுகாதார சேவை, கல்விக்கான வாய்ப்புக்கள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்கான பிரவேசத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற விடயங்களுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

CP/187/0576/701/012-1 ஆம் இலக்க மற்றும் 2018.03.28 அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம்பொருளாதார முகாமைத்துவம் பற்றிய உத்தியோகத்தர் குழுவின் செய்றபாடுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

### 2.1.1 செயற்திறன் பின்னூட்டல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள்.

செயற்திறன் பின்னூட்டல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள் என புதிய வடிவில் 2018 மே மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டங்களின் ஊடாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற் திட்டங்கள் தொடர்பாக எழும் பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் அதற்காக வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

இந்தக் கூட்டங்களின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1) கடந்த கூட்டங்களின்போது கலந்துரையாடிய விடயங்களின் ஊடாக பின்னூட்டலைப் பெற்று நிகழ்கால முன்னேற்றம் தொடர்பாக பகுப்பாய்வு செய்தல்.

2) தற்போது இனங்காணப்பட்டுள்ள தாமதங்களுடன் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான உதவியை வழங்கி உரிய தரப்பினர்களை சந்திக்கச் செய்தல்.

3) நிலவும் சட்ட வரையறைக்குள் முதலீட்டாளர்களின் திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆற்றலை பரீட்சித்தல் மற்றும் வழிகாட்டல்

4) இந்தக் கூட்டங்களின் ஊடாக அரச மற்றும் தனியார் துறைக்கிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான களத்தை அமைத்துக்கொடுத்தல்

அதற்கமைய, தற்போது 24 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதனூடாக கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டு 100 பரநிதுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.2. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி துரிதத் திட்டம்

**“60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐம்பெரும் திட்டத்” தின்** பிரகாரம் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் திரு. பாஸ்கரலிங்கம் அவர்களின் தலைமையில் பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் திரு.ஜே.சரித்த ரத்வத்தே உட்பட வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறை இணைந்து (Public Private Partnership) நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக இதுவரை 04 வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கீழ் குறிப்பிடப்படும் திட்டங்கள் தவிர நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட 05 காணிகளில் திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| இல. | திட்டம் | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சீ பிரீஸ் - வாத்துவை | 196 |
| 02 | கிரீன்வெலி - ஜல்தர | 352 |
| 03 | லவண்யா ஹய்ட்ஸ் - ராகமை | 124 |
| 04 | மவுன்ட் கிளிபர்ட்வத்த - ஹோமாகமை | 860 |

அத்துடன், வீடமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான காணிகள், குழாய் நீர், மின்சாரம், பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தை துரிதமாக பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

மேலும், பயனாளிகளுக்கு வீடுகளை விற்பனை செய்யும் விலைகளையும் அரசாங்கமே தீர்மானிக்கும். அத்துடன் பயனாளிகளுக்கு வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக அரச மற்றும் தனியார் வங்கிகளின் ஊடாக சலுகை வட்டி அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.3. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் சிபாரிசுகளை ஒன்றிணைப்பதற்கான அமைச்சரவைக் குழு

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளல், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், சட்டத்தின் ஆதிக்கம் மற்றும் நல்லாட்சியைப் போன்றே நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்ட பிரதான மறுசீரமைப்புக்களுடன் தொடர்புடைய முயற்சிகளை 2015 ஆம் ஆண்டு உருவாகிய புதிய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஆட்சி (Governance) மற்றும் மனித உரிமைகள் மீதான மதிப்பளிப்பை உயர் மட்டத்திற்கு கொண்டுவருவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயல்முறையுடன் இயைந்து செல்லல், விசேடமாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையுடன் மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்தி நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாட்டிற்காக செயற்படுவதற்கு கடமைப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான 30/1 ஆம் இலக்க இணக்கப்பாடு 2015 இல் அங்கீகரித்துக்கொள்ளப்பட்டதுடன், இந்த இணக்கப்பாடுகள் மீது இணை அனுசரணை வழங்கி இலங்கை அந்த சிபாரிசுகளை செயற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2017 மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வின்போது இலங்கை 34/01 ஆம் இலக்க மேலொமொரு இணக்கப்பாட்டிற்கு இணை அனுசரணை வழங்கியதுடன், 2015 இன் 30/1 ஆம் இலக்க இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்றுவதற்கான மேலும் இரண்டு வருட காலத்திற்கு அதனூடாக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அதனால், மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை கால அட்டவணைக்கமைய செயற்படுத்துவதற்காக மைய ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பொறிமுறைக்காக அமைச்சரவையினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் கீழ் குறிப்பிடப்படும் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

- கௌரவ திலக் மாரப்பன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.
- கௌரவ மங்கள சமரவீர, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்
- கௌரவ மஹிந்த சமரசிங்க, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்
- கௌரவ சுசில் பிரேமஜயந்த, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்
- கௌரவ சாகல ரத்னாயக்க, சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்
- கௌரவ தலத்தா அத்துகோரள, நீதி மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர்

- கௌரவ ருவன் விஜேவர்தன, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
- கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**மேற்குறிப்பிடப்பட்ட பிரதான குழுவுக்கு உதவி வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்படும் உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.**

- பிரதம அமைச்சரின் செயலாளர் (தலைவர்)
- செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
- செயலாளர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
- செயலாளர், நீதி அமைச்சு
- செயலாளர், சட்டமும், ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு
- திரு.நெரின் புள்ளே, பிரதி சொலிஷிட்டர் ஜெனரல், சட்ட மா அதிபர் திணைக்களம்
- திருமதி சந்திமா விக்ரமசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்

இந்த உப குழுவினால், 30/1 ஆம் இலக்க இணக்கப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை கண்காணிப்புக்குட்படுத்தும் அலுவலை மேற்கொள்வதற்காக பிரதான இரண்டு பிரிவுகளாக பிரித்துள்ளது. அதாவது; இடைக்கால நீதிப் பொறிமுறைகள் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மற்றும் மீண்டும் நிகழாதிருப்பதனை உறுதி செய்துகொள்வதற்கான நடவடிக்கைகள் என்பனவாகும். அமைச்சர்கள் குழு உத்தியோகத்தர் குழுவுடன் கலந்துரையாடலொன்றை நடாத்தியதுடன், ஏற்கனவே அங்கீகரித்துக்கொள்ளப்பட்டுள்ள குறிப்பிட்ட இரண்டு வருட காலத்தினுள் எஞ்சியுள்ள நடவடிக்கைகள் அனைத்தையும் வேகமாக நிறைவேற்றுவதற்கு தீர்மானித்துக்கொள்ளப்பட்டது.

சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக உத்தியோகத்தர்களைக் கொண்ட உப குழு சில தடவைகள் கூடியுள்ளதுடன், குறிப்பிட்ட அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.4. தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் 2017 - 2021

மனித உரிமைகள் சம்பந்தமான அரசாங்கத்தின் பொறுப்பை விரிவுபடுத்தும் விடயத்தில், அரசாங்கம், இறைமை அமைப்புக்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, தேர்தல்கள் ஆணைக் குழு, ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள், சிவில் சமூகப் பிரிவுகள் மற்றும் பொது மக்கள் உட்பட்ட விரிவான வீச்சில் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி 2017 - 2021 இற்கான தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2017 ஒக்டோபர் 03 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2017 முதல் 2021 வரை மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் நோக்கு இந்த திட்டத்தில் வெளியிடப்படும். தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் உரிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் முறையான கொள்கைகள் ஆவணம் தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையினால் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை மீளாய்வுக்குட்படுத்துவதற்காக பிரதமரின் தலைமையிலான அமைச்சர்களுக்கடையிலான குழுவொன்றையும் நியமிக்கப்பட்டுள்ளது. 2017 நவம்பர் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடாத்தப்பட்ட அமைச்சர்களுக்கிடையிலான குழுவின் ஆரம்ப கூட்டத்தின்போது தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க அவர்களின் வழிகாட்டலின் கீழ் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான முன்னேற்றத்தை உறுதி செய்யும் மற்றும் அமைச்சர் குழுவுக்கு அறிக்கைப்படுத்துவதற்கான அலுவல் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவொன்றும், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் குழுவின் தலைவராக பிரதமரின் செயலாளர் செயற்படுவதுடன், இந்தக் குழுவின் உள்ளடக்கம் தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் அமுல்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள 10 பணியகங்களுக்குப் பொறுப்பான பிரதான அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட ஏனைய தரப்பினரின் பிரதிநிதிகளைக் கொண்டமைந்துள்ளது.

குறிப்பிட்ட அத்தியாயங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக பிரதான அமைச்சுக்களின் செயலாளர்களின் தலைமையிலான துறை சார்ந்த 10 குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளது. துறைசார் குழுக்கள் மாதாந்தம் கூடி உத்தியோகத்தர் குழுவுக்கு முன்னேற்றம் பற்றி அறிக்கைப்படுத்தும். சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, நல்லிணக்கப் பொறிமுறை ஒரங்கிணைப்பு செயலகம் மற்றும் மாகாண சபைகளும் இந்த துறைசார் குழுக் கூட்டங்களில் பங்குபற்றும்.

தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் மேற்பார்வை மற்றும் செயற்படுத்துவதில் காணப்படும் தடைகள், உத்தியோகத்தர் குழுவுக்கு மற்றும் அமைச்சர்களுக்கிடையிலான

குழுவுக்கு அறிக்கைப்படுத்தல் போன்ற அலுவல்கள் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்பு செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்குள் செயற்பாடுகளை துரிதமாக நிறைவேற்றுவதன் நிமித்தம் 10 துறைசார் குழுக்களும் மாதாந்தக் கூட்டங்களை நடாத்தியுள்ளன. முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்னூட்டல் பொறிமுறையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்காக உத்தியோகத்தர் குழு காலாண்டு ரீதியாக கூடியுள்ளது.

குறுகிய கால செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவதற்காக இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கால எல்லை 2018 ஜூன் மாதத்துடன் முடிவடைந்தது. அந்த குறுகிய கால செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதடன், அமைச்சரவையின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் முதலாவது மீளாய்வுக் கூட்டத்தை 2018 இல் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டில் அதன் திருத்திய பதிப்பை அச்சிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.5. கொள்கை உருவாக்கல் அலுவலகம்

2015.10.07 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களை முன்னிறுத்தி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் கொள்கை உருவாக்கல் அலுவலகம் தாபிக்கப்பட்டது.

(1) தேசிய கொள்கைகளை உருவாக்குதல்

(2) பொருளாதாரம் சார்ந்த கொள்கைகளை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு

(3) தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளின் உற்பத்தித் திறனை மீளாய்வுக்குட்படுத்தல்

(4) இலங்கையின் அபிவிருத்தி மீது தாக்கம் செலுத்தும் வெளிவாரியான தாக்கங்கள் மற்றும் இலங்கைக்கு அதனூடாக ஏற்படும் அழுத்தங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளல்.

கொள்கைகளை உருவாக்கலுடன் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்து அரச கொள்கைகளை மீளாய்வுக்குட்படுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அமுல்படுத்தல் தொடர்பாக பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அறிக்கைகளை சமர்ப்பித்து அமைச்சரவை அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். அத்துடன், இந்த அலுவலகத்தினால் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) தேசிய கொள்கைகளை திட்டமிடல், உருவாக்குதல்

(2) பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்புச் செலுத்தும் கொள்கை சட்டகத்தை தயாரித்தல்

(3) அரச துறை மற்றும் அரச நிறுவனங்கள் தொடர்பான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை தயாரித்தல்

(4) அரச கொள்கைகள் அமுல்படுத்தப்படுவதனை ஒருங்கிணைத்தல்

**தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் முன்னேற்றம்;**

| இல. | துறை | திட்டங்கள் |
|---|---|---|
| 1 | தொழில்நுட்பம், தொழில்சார் மற்றும் கல்வி (TVET) | தொழில்நுட்பத் தொழில்சார் மற்றும் கல்விச சார்ந்த பயிற்சி தொடர்பான முதியோர் உபசரணை உதவி பயிற்சித் திட்டம், சற்றுலாத்துறை நிகழ்ச்சித் திட்டத்தை விருத்தி செய்தல், தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கான பிரதான செயற்திறன் குறிகாட்டி, தொழில்நுட்பம், தொழில் சார்ந்த கல்வி மற்றும் பயிற்சி சம்பந்தமான விருத்தி நிகழ்ச்சித் திட்டம், தொழில்நுட்பம், தொழில் சார்ந்த மற்றும் கல்வி சார்ந்த பயிற்சியை நோக்காகக் கொண்ட சிறுவர் உபசரணை நிகழ்ச்சித் திட்டம், இயந்திரவியல் இலத்திரணியல் விஞ்ஞானம் தொடர்பான உப குழு, தொழில்நுட்பம், தொழில் சார்ந்த மற்றும் கல்வி சார்ந்த பயிற்சிக்காக பெண்கள் உப குழு மற்றம் தொழில்நுட்பம், தொழில் மற்றும் கல்வி சார்ந்த பயிற்சியை நோக்கமாகக் கொண்ட விசேட நபர்களுக்கான உப குழு |

| இல. | துறை | திட்டங்கள் |
|---|---|---|
| 2 | தேசிய கொள்கைகளை தயாரித்தல் | சிரேஷ்ட பிரஜைகளுக்கான தேசிய கொள்கைகள், பெண்கள் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் பகல் நேரக் காப்பகங்கள் சம்பந்தமான தேசிய கொள்கை |
| 3 | சட்ட மறுசீரமைப்பு | சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதி மற்றம் திவால் நிலைமை பற்றிய சட்டங்கள் |
| 4 | கல்வி | தொழில் வழிகாட்டி மற்றும் 13 வருட கால கல்வியை உறுதிப்படுத்தல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) சம்பந்தமான கல்வி சார் நிகழ்ச்சித் திட்டங்கள் |
| 5 | சுற்றுலாத்துறை | சீகிரியாவில் சுற்றுலாப் பிரயாணிகளின் நெரிசலை குறைப்பதற்கான முன்மொழிவுகள் மற்றம் யால வனப் பூங்காவயின் சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டம் |
| 6 | தகவல் தொழில்நுட்பம் தொடர்பான திட்டங்கள் | முதியோர் உபசரணை சம்பந்தமான வலைதளம் மற்றம் முகாமைத்துவ தகவல் முறைமை(MIS), உள்நாட்டு விமான சேவைகள் சம்பந்தமான அலுவல்கள், அரச காணிகள் பற்றிய தகவல்கள் மற்றம் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தல், வர்த்தகங்களுக்கு சிறப்பு அடையாள இலக்கத்தை அறிமுகஞ் செய்தல், தொழில் பயிற்சி பெற்றுள்ள மாணவர்கள் தொடர்பான கணக்கெடுப்பு, பிரஜைகள் தரவுக் களஞ்சியம், கணனியை அடிப்படையாகக் கொண்ட புகையிரத வலையமைப்பு, வாகனங்களுக்கு அவ்விடத்திலேயே தண்டப் பணம் அறவிடல் முறைமை, தனிப்பட்ட சுகாதார இலக்கத்தை வழங்கும் திட்டம், மாத்தறை மேல் நீதிமன்றத்தின் அறிக்கைகளை இலத்திரணியல் கோவைப்படுத்தல் மற்றும் வாழ்க்கைச் செலவைக் கையாளுதல் சம்பந்தமான திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்ட ‘‘குரோப்லுக்’’ (Croplook) வலைதளத்தை மேம்படுத்தல். |
| 7 | பொருளாதாரம், நிதி மற்றும் அபிவிருத்தி | வணிக ஒப்பீட்டு நுண்பாக நிதிச் சட்டம், கிராமிய வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்யும் ஆரம்ப நடவடிக்கைகள், சூரிய சக்திக்கான திட்டம், வடக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு மற்றும் ஊழியத்திற்கான கேள்வி பற்றிய கணக்கெடுப்பு, ‘‘துருணு திரிய ’’கடன் திட்டம். |
| 8 | பெண்கள் மற்றும் பாலின சமூக நிலை | பெண்களின் நல்வாழ்வு பற்றிய கணக்கெடுப்பு |
| 9 | புனர்வாழ்வளிப்பு | வன்முறைக்குள் சிக்கிய முதியோர்கள் மற்றும் இளைஞர்களை சமூகமயப்படுத்தல் சம்பந்தமான விசேட வேலைத் திட்டம் |
| 10 | விவசாயம் | வர்த்தக முக்கியத்துவம்மிக்க தாவரங்கள் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான தேசிய கொள்கையை தயாரித்தல் மற்றும் வர்த்தக முக்கியத்துவம்மிக்க மூங்கில் தாவரங்கள் வளர்ப்பை ஊக்குவித்தல் திட்டம் |

## 2.6. மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன கருத் திட்ட அலுவலகம்

ஐக்கிய அமெரிக்க குடியரசின் மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியுடன் ஐந்து வருட காலத்திற்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் கீழ் குறிப்பிடப்படும் கருத் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

**(i) காணி நிர்வாகத் திட்டம்**

இந்த செயற் திட்டம் முக்கியமாக காணித் துண்டுகள் பொருத்தப்பாட்டு வரைபடம் மற்றும் அரச காணிகள் ஆவணம் தயாரிப்பு, காணிக் கொள்கை உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பின்போதான அரசாங்கத்தின் ஆற்றலை மேம்படுத்தல், காணி பற்றிய தகவல்கள் முறைமை மற்றும் காணி பற்றிய தரவுகளை மேம்படுத்தலைப் போன்றே உரிமைப் பத்திரங்களை பதிவு செய்யும் நடைமுறை மற்றும் காணிகளை மதிப்பீடு செய்யும் முறையை மேம்படுத்துவதற்காக கம்பஹா, கேகாலை, கண்டி, மாத்தளை, குருநாகல், அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**(ii) போக்குவரத்து அபிவிருத்தி திட்டம்**

இந்தத் திட்டமானது கொழும்பு மாநகர சபை பிரதேசம் உள்ளடக்கப்படும் வகையில் உயர் தரத்திலான மோட்டார் வாகன முகாமைத்துவ முறையொன்றை தாபித்தல், பஸ் வண்டிகள் போக்குவரத்து பிரிவை நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் சப்ரகமுவ, ஊவா, வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் தொடர்புபடுத்தப்படும் மத்திய சுற்றுவட்ட பாதையின் 137 கி.மீ. நிளமான பாதையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும் விவசாய உற்பத்திகளின் அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக தனியார் துறை முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் மத்திய சுற்றுவட்டப் பாதைத் தொகுதியின் குறிப்பிட்ட இடங்களில் விவசாய உற்பத்திகளுக்கான களஞ்சியசாலைகளை தாபிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் மற்றும் நிதியீட்டை கண்காணித்தலும் இந்த பாதை அபிவிருத்தித் திட்டத்திற்குள் அடங்கும்.

**செயற் திட்டங்களின் நிகழ்கால முன்னேற்றம்**

இறுதி செயற் திட்ட அறிக்கையை தயாரித்து முதலீட்டுக் குறிப்பு மிலேனிய சவால்கள் முதலீட்டு முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு 2018 செப்டெம்பர் மாதத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. செயற் திட்ட ஒப்பந்தம் 2018 டிசம்பர் மாதத்தில் வொசின்டனில் கைச்சாத்திடப்படவுள்ளதுடன் ஆரம்ப செயற் திட்ட செயற்பாடுகளை 2019 ஜனவரியில் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும், 2018 ஒக்டோபர் மாதம் எற்பட்ட எதிர்பாராத அரசியல் நிலைமை காரணமாக ஐக்கிய அமெரிக்க குடியரசு அரசாங்கத்தினால் நாடு இயல்பு நிலைக்கு வரும் வரையில் செயற் திட்டம் தடுத்துவைக்கப்பட்டது. தற்போது அந்த அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன், செயற் திட்டத்திற்கான கால எல்லை சம்பந்தமாக

கலந்துரையாடுவதற்கு மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபனத்தின் தூதுவர் குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் செயற் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்.

## 2.7. ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்புச் செயலகம்

2015 ஒக்டோபர் பிரதம அமைச்சரின் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது ஒன்றிணைந்த ஒத்துழைப்பு பிரகடனத்திற்கு ஜப்பான் மற்றம் இலங்கை அரசாங்கத்தின் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டதுடன், 2016 ஆகஸ்ட் மாதத்தில் அமைச்சரவை அங்கிகாரத்துடன் ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகம் தாபிக்கப்பட்டது.

ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தின் செயற்பாடுகள், இலங்கையின் பிரதமர் மற்றும் ஜப்பான் பிரதமரின் விசேட பிரதிநிதிக்கிடையில் நடைபெற்ற இருதரப்புக் கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

அதி தொழில்நுட்பத்தினைக்கொண்ட விவசாயம், கைத்தொழில்களுக்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், உயர் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி, கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் சிவில் பாதுகாப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படும் வகையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

**நோக்கங்கள்**

(1) பக்கச்சார்பற்ற மற்றும் முழுமையான அபிவிருத்திக்கான வாய்ப்பு
(2) இலங்கை பொருளாதாரச் செயற்பாடுகளை உலகளாவிய பெறுமதிச் சங்கிலியுடன் இணைத்தல்
(3) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறப்புத் தேர்ச்சியை ஏற்படுத்தல்
(4) இலங்கையில் அதி தொழில்நுட்பத்துடனான கைத்தொழில்களை விருத்தி செய்தல்
(5) இரு நாடுகளினதும் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின்போது பெறுபேற்றின் அடிப்படையில் மனித வளங்கள் அபிவிருத்தியை மையமாகக்கொண்ட இலத்திரணியல் அரச அணுகுமுறைகளுக்கு உதவி புரிதல்.

ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பற்றிய பொழிப்பு 05 வியடங்களின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### (i) வெளிநாட்டு முதலீடுகள், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் தொழில் முயற்சிகள்

2018 ஜனவரி மாதம் நடைபெற்ற ஜப்பான் வர்த்தக தூதுக் குழு அமர்வுடன் இணையான வகையில் இலங்கையில் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் சம்பந்தமான அடிப்படை ஆய்வொன்றினை மேற்கொள்வதற்காக ஜப்பானின் சில கம்பனிகளுக்கு ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தின் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. வர்த்தக

செயற்பாடுகளின் பெறுபேறாக ஏராளமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உள்நாட்டுத் தரப்பினர்களின் பங்கேற்புடன் தொழில்நுட்ப பரிமாற்றல் அணுகுமுறை ஆரம்பிக்கப்பட்டது. அந்த அதி தொழில்நுட்ப பரிமாற்றலின் முதலாவது கட்டமான மின்சார முச்சக்கர வண்டிகளை அறிமுகஞ் செய்வதற்கான முன்னோடித் திட்டமாக இலங்கை வீதிப் பரீட்சிப்பு உட்பட்ட சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆரம்பத்தில் கம்பனியினால் இலங்கையில் வெளிநாட்டு தொழில்நுட்ப முதலீடு (Foreign Technology Investment) மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்பப் பரிமாற்றலுக்காக (Foreign Technology Transfer) தொழில்நுட்பப் பிரிவொன்று தாபிக்கப்பட்டதுடன் இதற்காக பங்களிப்புச் செலுத்த முடியுமான உள்நாட்டுத் தரப்பினருடன் இணைந்து இந்த வாகனங்களை உற்பத்தியை ஆரம்பிப்பதற்காக உற்பத்திசாலையொன்றை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் உதவி மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மின்சார முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தி சுற்றாடல் நேய சுற்றுலாப் பயண முன்னோடி திட்டமொன்றை ஆரம்பிக்கும் முறையொன்றை தயாரிக்கும் அலுவல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சாத்திய வள ஆய்வு தொடர்பான இறுதி அறிக்கை 2018 டிசம்பர் மாதத்தில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வண்டியின் உதிரிப் பாகங்களில் சுமார் இனை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலுக்கு கலப்பின ஐஸ் (Hybrid Ice) ,id mwpKfQ; nra;tjw;fhf கலப்பின ஐஸ் தொழில்நுட்பம் சம்பந்தமான நிபுணர் குழுவொன்று இந்த நாட்டில் சுற்றுலா மேற்கொண்டதுடன் இலங்கையில் ஆராய்ச்சி செய்வதற்கு 100% ஜப்பான் முதலீட்டில் உள்நாட்டுக் கம்பனியொன்று தாபிக்கப்பட்டது. இந்தக் குழு மீன்பிடித் துறையைச் சேர்ந்தவர்களுடனும் இது சம்பந்தமாக கலந்துரையாடியது. இதன் அடுத்த கட்டமாக கலப்பின ஐஸ் தயாரிப்புக்காக இந்த மாதிர் இயந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கண்டி மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மண் சரிவு மற்றும் வெள்ளம் என்பவற்றை மேற்பார்வைக்குட்படுத்துவதற்காக ஆபத்து முன்னறிவிப்புக் கட்டமைப்பொன்றை செயற்படுத்துவதற்காகநகர அபிவிருத்தி அதிகார சபையின் இணக்கப்பாட்டின் அப்படையில் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் ஊடாக உணர் கருவிகளை (சென்சர்ஸ்) அடிப்படையாகக் கொண்ட ஆபத்தை முன்னறிவிப்பு திட்டமொன்று முன்வைக்கப்பட்டது. (Smart Society) ,ந்த முன்னோடித் திட்டம் நேர்த்தியான சமூகம் (Smart Society) பற்றிய எண்ணக் கருவை பரீட்சிப்பதற்காக மேலும் விரிவுபடுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நகர அபிவிருத்தி அதிகார சபை, பேராதனை பல்கலைக்கழகம், கல்வியமைச்சு, மாநகர மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆறு பிரதிநிதிகள் இந்த ஒத்துழைப்பு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியதுடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுபேறாக

பேராதனை பல்கலைக்கழகத்தில் மாதிரி நரம்பு ஆய்வுகூடத் தொகுதியொன்று (Nerve Net lab system) தாபிக்கப்பட்டது.

**(ii) உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மின் உற்பத்தி அபிவிருத்தி**

தற்போது இந்த அலுவலகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கண்டி அதிவேகப் பாதையுடன் தொடர்பான கலந்துரையாடல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், வெளிநாட:டு வளங்கள் திணைக்களம் கடன் ஒப்பந்தத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**(iii) நகர மற்றும் பிராந்திய அபிவிருத்தி**

உள்ளூர் தரப்பினருடனான சில கூட்டங்கள் மற்றும் ஜப்பான் - இலங்கை செயற்பாட்டு குழுக் கூட்டங்கள் நான்கு நடாத்தப்பட்டுள்ளன. இறுதி திட்ட அறிக்கை 2018 ஒக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் சுகாதாரம் ஆரோக்கியம் சம்பந்தமான ஷீகா மாநில மாதிரியைப் பின்பற்றி கண்டி மாநகரத் திட்டத்துடன் இணைந்து முன்னேறிய விவசாய - மருத்துவ நிலையமொன்றை அபிவிருத்தி செய்வதற்கான ஆற்றல் சம்பந்தமான கலந்துரையாடல் ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.

**(iv) விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக்கொண்ட மானிட /அபிவிருத்தி மக்களிடையே பரிமாற்றல்**

ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகம் ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி மட்டம் வரை விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் போன்ற துறைகளில் கல்வி கற்கும் ஜப்பானின் குன்மா (Gunma) பல்கலைக்கழகத்தின் ஜப்பான் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டது. விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் மற்றும் ரொபோடிக் போன்ற துறைகளின் கல்வி அனுபவங்களை திரட்டிக்கொள்வதற்காக குன்மா (Gunma) பல்கலைக்கழகத்தின் இடைச் செயற்பாட்டு பாடநெறிகளில் கலந்துகொள்வதற்காக ரொபோடிக், பொறியியல், மின்சாரம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கல் துறைகளில் இலங்கை மாணவர்களுக்கு 2 வாரம் - 01 மாதம் வரையிலான காலப் பகுதியைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்வதனை ஜப்பான் பிரதிநிதிகள் உறுதி செய்துள்ளனர்.

ஜப்பானின் சீஷென்கன் பல்கலைக்கழகம் மற்றும் கொள்கை ஆய்வு பற்றிய தேசிய பட்டப்படிப்பு நிறுவனத்தின் உதவியுடன் அரசாங்கத்தின் இணைந்த பாடசாலையொன்றை தாபிப்பதற்கான சாத்தியம் பற்றிய ஆய்வு செய்வதற்கு ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

**(v) பாதுகாப்பு மற்றும் காப்பீடு**

இலங்கையின் மதிப்புக்குரிய முன்னாள் இளைப்பாறிய இராணுவ அதிகாரிகளை பயிற்சிக்காக ஜப்பானுக்கு அனுப்புதல் சம்பந்தமாக ஜப்பான் பிரதமரின் விசேட பிரதிநிதியுடன் கலந்துரையாடப்பட்டது.

ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்துடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டதன் பின்னர் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கியினால்

அதன் நடைமுறைகள், ஒத்துழைப்பு செயலகத்தின் (1) உட்கட்டமைப்பு மற்றும் மின்சக்தி வசதிகள் (2) நகர மற்றும் பிராந்திய அபிவிருத்தி (3) வெளிநாட்டு முதலீடுகள், வர்த்தக தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சிகள் (4) விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக்கொண்ட மானிட /அபிவிருத்தி மக்களிடையே பரிமாற்றல் (5) பாதுகாப்பு மற்றும் காப்பீடு, போன்ற ஐம்பெரும் விடயப் பரப்புக்களுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலம், இலங்கையின் முதலீடு செய்வதன் நிமித்தம் பல்வேறு முறைகளின் ஊடாக இலங்கையின் சர்வதேச கடன் விகிதங்களை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.

## 2.8. தேசிய ஊடக மத்திய நிலையம்

தேசிய ஊடக மத்திய நிலையம் ஊடக அலுவல்களுடன் தொடர்பான அரசாங்கத்தின் பிரதான செயற்பாட்டு நிறுவனமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. ஊடக கண்காணிப்பு, ஊடக மற்றும் அரசியல் பற்றிய பகுப்பாய்வு நடவடிக்கைகள் இதன் முக்கிய அலுவல்களாக இருப்பதுடன் அரசாங்கத்தின் பல்வேறு செயற் திட்டங்களுடன் தொடர்பான தகவல்களை திரட்டல் மற்றும் தகவல்களை வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

- **ஊடக கண்காணிப்பு**

இந்த நாட்டின் இலத்திரணியல், அச்சு மற்றும் புதிய ஊடகங்கள் பற்றிய கண்காணிப்பு நடவடிக்கைகள் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்றது. ஊடகக் கண்காணிப்புப் பிரிவின் கீழ் நாளாந்தம் 18 பத்திரிகைள், 10 தொலைக்காட்சி அலைவரிசைகள், 05 வானொலி அலைவரிசைகள் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டு விபரமான அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன் பல சமூக ஊடக இணையத் தளங்களும் கண்காணிப்புக்குட்படுத்தப்படுகின்றன. கண்காணிப்பு அறிக்கைகள் அறிக்கைகள் தினந்தோறும் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

அமைச்சரவை முடிவுகள் தொலைக்காட்சி ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் விதம் சம்பந்தமாகவும் மாதாந்த அறிக்கையொன்று தயாரிக்கப்படுகின்றது. பத்திரிகைகளில் வெளியிடப்படும் ஜனாதிபதியவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய மனிதாபிமான உணர்வுபூர்வமான விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் தேவைப் பிரகாரம் தினந்தோறும் அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும்.

- **ஊடக மற்றும் அரசியல் பகுப்பாய்வு / அரசியல் ஆய்வு**

ஊடக கண்காணிப்பு அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு விடயங்களின் கீழ் 100 இற்கும் அதிகமான விசேட ஆய்வறிக்கைகள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பாராளுமன்ற விவாதங்கள், தொலைக்காட்சி விவாதங்கள், வானொலி நேர்முகக் கலந்துரையாடல்கள், பத்திரிகை கலந்துரையாடல்களில் பங்குபற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

- **விசேட ஊடகப் பிரிவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட ஊடகப் பிரிவுக்கு ஊடகக் கண்காணிப்பு விசேட அறிக்கையை பெற்றுக்கொடுத்தல் மற்றும் நாளாந்த செய்திகளுக்கு தேவையான தரவுகளை வழங்குதல்.

- **அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்**

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் தவிர தகவலறியும் சட்டம், நல்லிணக்கம், என்டர்பிரைசஸ் ஸ்ரீ லங்கா மற்றும் தகவலறியும் சட்டம் பற்றி தெளிவுபடுத்தும் செயலமர்வுகள் போன்ற அரசாங்கத்தின் விசேட திட்டங்களுக்கு வள நிலையமாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தப் பிரிவு 2018 டிசம்பர் 28 ஆம் திகதிய 2103/33 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பாதுகாப்பு அமைச்சின் கீழான நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2.9. அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்பட்டுள்ள தாமதங்களை இனங்கண்டுகொள்வதற்கான அமைச்சரவை உப குழு

அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கமைய முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்பட்டுள்ள தாமதங்களுக்கான காரணங்கள் தொடர்பாக பொருத்தமான சிபாரிசுகளை முன்வைப்பதற்காக 2018 ஜூன் மாதம் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது.

**அந்த உப குழுவின் அலுவல்கள்:**

அமைச்சரவையினால் அமைச்சரவை உப குழுவிடம் முன்வைக்கப்படும் ;

(1) முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்த வேண்டுமென குறிப்பிட்ட அமைச்சுக்களினால் இனங்காணப்பட்டுள்ள, தற்போது தாமதமடைந்துள்ள திட்டங்கள்,

(2) அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களின் பிரகாரம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டங்கள்

தொடர்பாக ஆராய்ந்து அமைச்சரவைக்கு சிபாரிசுகளை முன்வைப்பதாகும்.

**அமைச்சரவை உப குழுவின் உள்ளடக்கம்:**

- கௌரவ ரணில் விக்கிரமசிங்க - பிரதம அமைச்சர் (தலைவர்)
- கௌரவ மங்கள சமரவீர - நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்
- கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம - விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி, திறன் அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் மலைநாட்டு மரபுரிமைகள் அமைச்சர்

- கௌரவ பாட்டலி சம்பிக்க ரணவக்க - மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்
- கௌரவ கபீர் ஹஸீம் - பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்
- கௌரவ மலிக் சமரவிக்ரம - அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

பிரதமரின் செயலாளர் இந்த அமைச்சரவை உப குழுவின் செயலாளர் /அழைப்பாளராக நடவடிக்கை மேற்கொள்வார்

**கூட்டங்களின் முன்னேற்றம்**

03 உப குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

(i) அமைச்சரவையினால் முன்வைக்கப்பட்ட நிர்வாக ரீதியிலான சிக்கல்கள் காரணமாக நிறைவு பெறாதிருக்கும் பாரியளவிலான வெளிநாட்டு (07) நேரடி முதலீட்டுத் திட்டங்களை துரிதப்படுத்தல்

(ii) சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்பட்ட தாமதமடைந்துள்ள 42 வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள் தொடர்பாக அக் கூட்டங்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை அமைச்சரவையில் சமர்ப்பித்தல்.

தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் அனைத்து உள்நாட்டு / வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தியுள்ள திட்டங்கள் தொடர்பான விபரங்கள், அனைத்து நிரல் அமைச்சுக்களினதும் செயலாளர்களுடனான கூட்டத்தின்போது குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தாமதமடைந்துள்ள திட்டங்களை இனங்கண்டுகொள்ளுமாறு 2018 ஜூலை மாதம் 18 ஆம் திகதி பிரதமரின் செயலாளரால் சகல அமைச்சுக்களிடமும் கோரப்பட்டதற்கிணங்க 26 அமைச்சுக்கள் விபரங்களை முன்வைத்துள்ளன.

## 2.10. வட மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் விசேட பிரிவு

பிரதம அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் வட மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான விசேட பிரிவொன்று 2018 ஜூன் மாதம் அலரி மாளிகையில் தாபிக்கப்பட்டது.

வட மாகாணத்தில் போன்றே கிழக்கு மாகாணத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்களுடன் தொடர்பான முக்கிய பிரச்சினைகளை இனங்கண்டுகொள்ளல் மீது இந்தக் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. பிரதம அமைச்சர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்களில் சில கூட்டங்களை நடாத்தியதுடன், அந்தக் கூட்டங்களின்போது இனங்காணப்பட்டுள்ள வட மாகாணத்தில் வாழும் மக்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ள முக்கிய சில பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வதன் நிமித்தம் உரிய அதிகாரிகளிடம் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது

## 2.11. செயற் திட்ட மீளாய்வு மற்றும் ஒருங்கிணைப்புக் கூட்டம்

**அடிப்படை அலுவல்கள்:**

(1) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் அபிவிருத்தித திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்பான முன்னேற்றத்தை மீளாய்வுக்குட்படுத்தல், சிக்கல்களை இனங்காணல் மற்றும் அந்த சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காககொள்கை ரீதியில் வழிகாட்டல்

(2) தேசிய முதலீட்டு வேலைத் திட்டங்கள் உருவாக்கத்திற்காக வழிகாட்டல் மற்றும் தனியார் துறை முதலீடுகளுக்காக வசதிகளை வழங்குதல்.

(3) சட்டங்களை விதித்தல் / திருத்தியமைத்தலுடன் தொடர்புடைய அலுவல்கள் மற்றும் இலங்கையில் முதலீடுகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தலை துரிதப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதல்.

2018 மே மாதம் 16 முதல் 2018 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குள், “தனியார் துறை குழுப் பரிந்துரைகள் - பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கான குறுகிய கால உபா வழிமுறைகள் ” எனும் அடிப்படையில் இரண்டு கூட்டங்கள் உட்பட, 16 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அபிவிருத்தி மற்றும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களின் கீழ் 132 இற்கும் அதிகமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. கலந்துரையாடல்களின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை செயற்படுத்தல் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

# 03. சர்வதேச ஒத்துழைப்பு மேம்பாடு

### 3.1. பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள்

உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, தொழிநுட்ப விஞ்ஞான அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கள், ஏனைய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும், இரு தரப்பு மற்றும் பல் தரப்புத் தொடர்புகள் மற்றும் ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதற்காகவும் பிரதம அமைச்சர் அவர்கள் 2018 இன் ஆரம்பப் பகுதியில் பல வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டார். இந்து சமுத்திரத்தின் பொருளாதார மற்றும் வணிக கேந்திர நிலையமாக நாட்டை முன்னேற்றுதல், 2030 ஆகும்போது இலங்கையை உயர் வருமானமுடைய நாடாக மாற்றியமைப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என அரச தலைவர்களுடன் இடம்பெற்ற இருதரப்புக் கலந்துரையாடல்களின்போது பிரதம அமைச்சர் அவர்களினால் தெரிவிக்கப்பட்டது

பொருளாதார, அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் எமது நாடு நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்குக் காரணமாய் அமைந்த அந்த உத்தியோகபூர்வ விஜயங்கள் தொடர்பான சுருக்கமானதோர் விளக்கம் கீழே காணப்படுகிறது.

#### 3.1.1. சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட இலங்கை முதலீட்டு மாநாடு – 2018 மார்ச்

சிங்கப்பூரிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகம் மற்றும் சிங்கப்பூர் - இலங்கை வர்த்தக சங்கத்துடன் இணைந்து கொழும்பு பங்குச் சந்தை மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் 2018 மார்ச் 02 ஆந் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை முதலீட்டு மாநாட்டின் பிரதம அதிதியாக பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உரையாற்றினார். கம்பனிகள், முதலீட்டாளர்கள் மற்றும் நிதிய முகாமையளர்கள் 350 இற்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

சிங்கப்பூரை வர்த்தக, முதலீட்டு மற்றும் தொழிநுட்ப விஞ்ஞானப் பங்காளர் எனக் கருதி இலங்கையின் பிரதான வர்த்தகர்கள் மற்றும் நிறைவேற்று அலுவலர்கள் 60 க்கு மேற்பட்டோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதாரத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக மாநாட்டின்போது வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் கௌரவ எஸ் ஈஸ்வரன் அவர்களுடன் இரு தரப்புப் பேச்சுவார்த்தையிலும் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கலந்துகொண்டார்.








### 3.1.2. சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட உலக நகர மாநாடு – 2018 ஜூலை

உலக நகர மாநாடு, ‘‘சிங்கப்பூர் சர்வதேச நீர் வார நிகழ்ச்சி’’ மற்றும் ‘‘சிங்கப்பூர் தூய சுற்றாடல் மாநாடு - 2018’’ என்பவற்றில் கலந்துகொள்வதற்காக பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது தூதுக் குழுவினருடன் 2018 ஜூலை மாதம் 8 – 10 காலப்பகுதியில் சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதுடன், 2018 ஜூலை மாதம் 09 ஆந் திகதி மாநாட்டு அமர்வில் நகர அபிவிருத்தி மற்றும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு ஏற்புடைய நோக்கு, போக்குகள் மற்றும் தீர்வுகளை உள்ளடக்கி பிரதான உரையை நிகழ்த்தினார்.

இந்த விஜயத்தின்போது கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சிங்கப்பூர் பிரதமர் கௌரவ லீ சியங் லோங், பிரதிப் பிரதமர் மற்றும் பொருளாதார, சமூகக் கொள்கைகள் ஒருங்கிணைப்பு அமைச்சர் கௌரவ தர்மன் சண்முகரத்னம், முன்னாள் பிரதமர் சொக் டொங் ஆகியோர் உள்ளிட்ட சிங்கப்பூர் அரசின் உயர் மட்ட இராஜதந்திரிகளைச் சந்தித்தார்.








**3.1.3. இந்து சமுத்திர மாநாடு, வியட்நாமின் ஹெனோய் நகரம் - 2018 ஆகஸ்ட்**

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2018 ஆகஸ்ட் 27 மற்றும் 28 ஆந் திகதிகளில் வியட்நாமில் இடம்பெற்ற இந்து சமுத்திர மாநாட்டின் 3 ஆவது மாநாட்டில் கலந்துகொண்டார். இந்த மாநாட்டின்போது அதில் கலந்துகொண்ட ஏனைய நாடுகளின் அரசியல் பிரதிநிதிகளான,

- வியட்நாமின் பிரதிப் பிரதமர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ பேம் பின் மின் அவர்கள்
- சிங்கப்பூரின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ விவியன் பாலகிருஷ்ணன் அவர்கள்
- இந்தியாவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஸ்ரீமதீ சுஸ்மா ஸ்வராஜ் அவர்கள்
- பங்களாதேசின் திட்டமிடல் அமைச்சர் கௌரவ ஏ எச் எம் முஸ்தபா கமால் அவர்கள்

ஆகியோருடனும் பிரதம அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.










### 3.1.4 தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் உலக பொருளாதார மாநாடு, வியட்நாம் - 2018 செப்டம்பர்

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு ஏற்ப தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் உலக பொருளாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக 2018 செப்டம்பர் மாதம் 10 முதல் 13 ஆந் திகதி வரை வியட்நாமுக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது, வியட்நாம் பிரதமர் அதிமேதகு குயென் குசுஆன் புக் அவர்களுடன் நடாத்தப்பட்ட இருதரப்புப் பேச்சுவார்த்தையின்போது, 2016 ஆம் ஆண்டில் இணங்கியவாறு ஐக்கிய அமெரிக்க டொலர் பில்லியன் இருதரப்பு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் இலக்கிற்காக நடவடிக்கை மேற்கொள்வதன் முக்கியத்துவம் கருத்திற் கொள்ளப்பட்டது. அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஆடைத்துறை ஏற்றுமதிக்கு ஏற்புடையதாக "பிராந்திய ரீதியில் ஒன்றிணைவதற்காக" இணைந்த முயற்சி அடிப்படையில் செயற்படுவதற்கான வாய்ப்பு தொடர்பாக விசேடமாகக் கலந்துரையாடியதுடன், இலங்கை மற்றும் வியட்நாமுக்கிடையே மீன்பிடித்துறை தொடர்பான செயல் திட்டத்தில் கையொப்பமிடுவதற்கான வாய்ப்பு தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்பட்டது.

உலக பொருளாதா மாநாட்டின்போது பிரதம அமைச்சர் அவர்கள் கொரியக் குடியரசின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ கேங் குயுவா அவர்களை சந்தித்ததுடன், இதன்போது வர்த்தகம், முதலீடு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம், அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாக கொரியக் குடியரசுடன் நெருக்கமான ஒத்துழைப்பினைப் பேணிச் செல்வது குறித்து இலங்கையின் ஆர்வம் எடுத்துரைக்கப்பட்டது.

பிரதம அமைச்சர் அவர்கள், இந்தோனேசிய ஜனாதிபதி அதிமேதகு ஜோகோ விடோடோ அவர்கள், கம்போஜியாவின் பிரதமர் அதிமேதகு சம்தெக் டெகோ ஹுங் செங் அவர்கள், உலக பொருளாதார மாநாட்டின் நிறுவுனர் மற்றும் நிறைவேற்றுத் தலைவர் பேராசிரியர் குளோஸ் சுவப் அவர்கள் மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் அதிமேதகு தாடோ ஜொக் ஹொய் - லிம் அவர்களுடன் சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பாக இருதரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்.














### 3.1.5 நோர்வே நாட்டிற்கான உத்தியோகபூர்வ விஜயம் - 2018 ஒக்டோபர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை நோர்வே நாட்டிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இந்த விஜயத்தின்போது கௌரவ பிரதமர் அவர்கள் நோர்வே நாட்டின் பிரதமர் கௌரவ அர்னா சோல்பர்க் அம்மையார், நோர்வே மேல் மந்திரி சபையின் தலைவி திருமதி டுனே வல்ஹெல்ம்சன், நோர்வே வெளிநாட்டமைச்சர் திருமதி இனே எரிக்சன் எஸ்ஒரெய்தே, நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் திரு.நிகொலாய் அஸ்ட்ரப் ஆகியோரை சந்தித்தார். மேலே குறிப்பிடப்பட்ட சந்திப்புக்களின்போது கலந்துரையாடப்பட்ட துறைகளிடையே இருதரப்புத் தொடர்புகள், இடைக்கால நியாயம் மற்றும் சமாதானம், ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள் (SDGs), சுற்றாடல்,சமுத்திரம் மற்றும் மீன்பிடித் துறை, பாலின சமத்துவம், அரச - தனியார் கூட்டு முயற்சிகள் மற்றும் பன்முகப் பங்கேற்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.


நோர் பிரதமருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தாபன மயப்படுத்தப்பட்டுள்ள மீன்பிடி மற்றும் சமுத்திரம் சார்ந்த துறைகளின் இருதரப்பு தொடர்புகள் இனங்காணப்பட்டன. இங்கு கண்ட நீர்த்தேக்கம், கடலடிப் பாதுகாப்பு, சமுத்திர வளங்களை பேண்தகு அடிப்படையில் பயன்படுத்தல் மற்றும் சமுத்திரப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் மீதான இரு நாடுகளுக்குமிடையிலான ஆர்வம் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

சர்வதேச அபிவிருத்தி அமைச்சருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது இலங்கை மற்றும் நோர்வே அரசாங்கங்களுக்கிடையிலான மீன்பிடி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவுகளில் அரச - தனியார் கூட்டு முயற்சியை விருத்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.





### 3.1.6 ஐக்கிய இராச்சியத்திற்கான உத்தியோகபூர்வ விஜயம் - 2018 ஒக்டோபர்




கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஐக்கிய இராச்சித்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும்போது ஒக்ஸபோர்ட் பல்கலைக்கழகத்தின் அழைப்பின்பேரில் 2018 ஒக்டோபர் 8 ஆம் திகதி ஒக்ஸ்போர்ட் சங்கத்தில் உரை நிகழ்த்தினார். இலங்கை மாணவர்கள் உட்பட சர்வதேச மாணவர்களுடன் இடை செயற்பாட்டு அமர்வுகளைக் கொண்ட அந்த உரையின்போது பிரதம அமைச்சர் இந்து சமுத்திர வலயத்தின் பூகோள அரசியல் சம்பந்தமாக உரையாற்றினார்.

### 3.1.7 இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் - 2018 ஒக்டோபர்

பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட இலங்கை தூதுக் குழுவினர் 2018 ஒக்டோபர் 18 - 20 வரை இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டனர்.

2018 ஒக்டோபர் 20 ஆம் திகதி இலங்கைப் பிரதமர் இந்தியப் பிரதமருடன் இராஜதந்திர மட்டத்திலான கலந்துரையாடலை மேற்கொண்டார். இலங்கைத் தூதுக் குழுவுக்கு இந்தியப் பிரதமரால் பகல் போசன விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த விஜயத்தின் ஊடாக இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களிடையே நிலவும் பிரிக்க முடியாத தொடர்பு வெளிப்படுத்தப்படுகின்றது. வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு, விரிவான அபிவிருத்தி ஒத்துழைப்பு, கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், இயலளவு விருத்தி மற்றும் மக்களிடையேயான தொடர்புகளை விரிவுபடுத்துதல் தொடர்பாக உயர் மட்டத்திலான நெருங்கிய அரசியல் சந்திப்புக்களை இந்த பல்தரப்பு கூட்டு முயற்சி கொண்டுள்ளது. இரு தரப்புத் தொடர்புகள் சம்பந்தமான தொனிப் பொருள்கள் மற்றும் இரு

நாடுகளுக்குமிடையிலான வரலாற்று ரீதியிலான நெருங்கிய நட்புறவுகளை மேலும் பலப்படுத்த முடியமான விதம் சம்பந்தமாக இரண்டு பிரதமர்களும் கலந்துரையாடினர். இங்கு பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் தொடர்பாகவும் இரு நாட்டுத் தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். 2017 ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களில் இலங்கைப் பிரதமரின் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் உட்பட அண்மைக் காலங்களில் உயர் மட்ட இரு தரப்புக் கலந்துரையாடல்களின்போது எடுக்கப்பட்ட பல்வேறு தீர்மானங்களை செயற்படுத்தல் தொடர்பான முன்னேற்றமும் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.







## 3.2. பிரதம அமைச்சர் அவர்கள் சந்தித்த இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள்

| இலக்கம் | திகதி | சந்தித்த இராஜதந்திரிகள் |
|---|---|---|
| 01 | 2018.01.04 | ஐக்கிய இராச்சியப் பாராளுமன்றத்தின் இலங்கைக்கு ஏற்புடைய சர்வகட்சிப் பாராளுமன்ற சபையின் கௌரவ ரணில் ஜயவர்தன அவர்கள் |
| 02 | 2018.01.04 | ஜப்பான் வெளிநாட்டமைச்சர் கௌரவ டாரோ கோனோ அவர்கள் |
| 03 | 2018.01.04 | சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சுபீர் கொகான் அவர்கள் |
| 04 | 2018.01.15 | இந்தியாவின் சட்டம், நீதிமன்றம், இலத்திரனியல் மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சர் கௌரவ ரவீ ஷங்கர் பிரஸாத் அவர்கள் |
| 05 | 2018.01.16 | ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவின் தலைவர் மிசா ரமேகர்ஸ் அவர்கள் |
| 06 | 2018.01.17 | பாகிஸ்தான இராணுவ பதவியணித் தலைவர் ஜெனரல் கமார் ஜாவித் பஜ்வா அவர்கள் |
| 07 | 2018.01.23 | சிங்கப்பூர் பிரதமர் கௌரவ லீங் சியங் லுங் அவர்கள் |
| 08 | 2018.01.24 | இந்திய வர்த்தகப் பிரதிநிதிகள் சபை |
| 09 | 2018.01.25 | இந்தோனேசிய ஜனாதிபதி அதிமேதகு ஜோகோ விடோடோ அவர்கள் |
| 10 | 2018.01.25 | சிகாரா சிமிசு அவர்கள் மற்றும் நிமுரா அவர்கள், ஜப்பான் வணிக மற்றும் கைத்தொழில் சபை, டோக்கியோ வணிக மற்றும் கைத்தொழில் சபை ஆகியவற்றின் தூதுக் குழுவினர் |
| 11 | 2018.02.04 | சீன பொதுசன அரசியல் ஆலோசனை சபையின் உப தலைவர் கௌரவ வெங்க்வின்மின் அவர்கள் |
| 12 | 2018.02.04 | ஜப்பான் இலங்கை பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் மற்றும் ஜப்பான் மக்கள் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் கௌரவ வடாரு டகேசிடா அவர்கள் |
| 13 | 2018.02.26 | ஜப்பான் உதவி வெளிநாட்டமைச்சர் கௌரவ கசுயா நசிடா அவர்கள் |
| 14 | 2018.02.26 | ஐக்கிய அமெரிக்க அமைதி இராணுவ பிரதான நிறைவேற்று அதிகாரி சீலா குரோலி அவர்கள் |
| 15 | 2018.03.07 | ஜோர்தானின் கண்ணிவெடிகளை நிராகரிப்பதற்கான சாசனத்தின் விசேட பிரதிநிதி மியட் ரோட் அல் ஹுசைன் அவர்கள் |

| இலக்கம் | திகதி | சந்தித்த இராஜதந்திரிகள் |
|---|---|---|
| 16 | 2018.03.09 | ஐக்கிய நாடுகளின் உப செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் அவர்கள் |
| 17 | 2018.03.28 | கொகா கோலா நிறுவனத்தின் உலகத் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர் ஜேம்ஸ் குவின்சி அவர்கள் |
| 18 | 2018.03.28 | சீன வங்கியின் தலைவர் வெங்க் சிக்யுவான் அவர்கள் |
| 19 | 2018.04.05 | சர்வதேச வணிக சங்கத்தின் தலைவர் ஜென் சஹ்ராதில் அவர்கள் |
| 20 | 2018.04.19 | ஈரான் இஸ்லாமியப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ அலி லரிஜானி அவர்கள் |
| 21 | 2018.05.04 | ஜப்பான் பிரதமரின் விசேட பிரதிநிதி கலாநிதி ஹிராடோ இசுமி அவர்கள் |
| 22 | 2018.05.07 | சேர்பியாவின் முதலாவது பிரதிப் பிரதமர் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ இவிகா டசீக் அவர்கள் |
| 23 | 2018.05.30 | மெக் தோர்ன்பெரி அவர்களின் தலைமையிலான ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் சபையின் பிரதிநிதிகள் குழுவினர் |
| 24 | 2018.06.19 | சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி மெதிவ் மொரெல் அவர்கள் |
| 25 | 2018.07.06 | சர்வதேச கணக்குப் பேரவையின் தலைவர் ரசெல் கிரிம்ஸ் அவர்கள் |
| 26 | 2018.07.11 | பூட்டான் சபாநாயகர் கௌரவ ஜிக்மே செங்பொ அவர்கள் |
| 27 | 2018.07.13 | இந்திய வெளியுறவுச் செயலாளர் விஜே கொக்லே அவர்கள் |
| 28 | 2018.07.13 | தாய்லாந்துப் பிரதமர் கௌரவ ஜெனரல் பிரயுத் சன் ஓ சா அவர்கள் |
| 29 | 2018.07.16 | பெல்ஜியம் பாராளுமன்ற தூதுவர் சபையின் கௌரவ (பேராசிரியர்) பெட்ரா த சடர் அவர்கள் |
| 30 | 2018.07.19 | உக்ரைன் பாராளுமன்ற தூதுவர் சபையின் கௌரவ ஒக்சானா பிலோசிர் அவர்கள் |
| 31 | 2018.07.23 | ஐக்கிய அமெரிக்க பசுபிக் கட்டளைத் தளபதி ஜெனரல் ரொபட் பீ பிரவுன் அவர்கள் |
| 32 | 2018.07.24 | தாய்லாந்தின் வத் சங்கதன் ஆராமயவின் தலைமை் தேரர் |

| இலக்கம் | திகதி | சந்தித்த இராஜதந்திரிகள் |
|---|---|---|
| 33 | 2018.08.01 | பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் அதிமேதகு பெட்ரீசியா ஸ்கொட்லண்ட் அவர்கள் |
| 34 | 2018.08.01 | ஈரான் வெளிநாட்டமைச்சர் கௌரவ (கலாநிதி) முஹம்மத் ஜவாத் ஷரீப் அவர்கள் |
| 35 | 2018.08.06 | சுவிற்சர்லாந்தின் முன்னாள் குடியரசு உறுப்பினர் சிமொனெடா சொமருகா அவர்கள் |
| 36 | 2018.08.21 | ஜப்பான் இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் கௌரவ இட்சுனொரி ஒனொதரா அவர்கள் |
| 37 | 2018.08.29 | ஜப்பானின் வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ கசுயிகி நகானே அவர்கள் |
| 38 | 2018.09.18 | மிலேனிய சவால்கள் பிரதான செயற்பாட்டு அதிகாரி ஜொனதன் நேஷ் அவர்கள் |
| 39 | 2018.09.21 | செக் குடியரசின் பாராளுமன்ற உயர் மந்திரிகள் சபையின் தலைவர் மிலான் ஸ்டெச் அவர்கள் |
| 40 | 2018.10.11 | ஐக்கிய அமெரிக்க குடியரசின் உதவிச் செயலாளர், தூதுவர் எலயிஸ் வெல்ஸ் அம்மையார் |
| 41 | 2018.10.11 | ஜப்பானின் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான பிரதி அமைச்சர் கௌரவ சாதொஷி சுசுகி அவர்கள் |

# 04. பாராளுமன்றம் மற்றும் சட்டரீதியான அலுவல்கள்

## 4.1. பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் சட்ட அலுவல்கள் பிரிவு

பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழான பல்வேறுபட்ட சட்டரீதியான பணிகளுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளுதல், அமைச்சரவை அலுவலகம் மற்றும் பாராளுமன்றத்துடனான ஒருங்கிணைப்பை பிரதம அமைச்சர் அலுவலகம் மேற்கொள்கிறது.

### 4.1.1. அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல்

2018 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரை பல்வேறுபட்ட விடயங்களுக்காக 62 அமைச்சரவை நிருபங்களும் 18 அமைச்சரவைக் குறிப்புக்களும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அத்தீர்மானங்களிடையே பிரதம அமைச்சரின் செயலாளரால் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களை செயற்படுத்தல் மற்றும் அவை தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.1.2. பிரேரணை அங்கீகாரங்கள்

ஜனாதிபதியவர்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய பிரேரணைகளைப் போன்றே கௌரவ பிரதம அமைச்சரின் விடயப் பரப்பின் கீழான விடயங்கள் தொடர்பாகவும் பாராளுமன்றத்திற்கு பிரேரணைகளை முன்வைத்து அங்கீகரித்துக்கொள்வதுடன் தொடர்பான அலுலவல்களும் பிரதம அமைச்சரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய 2018 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரை கீழுள்ள பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், உப தலைவரின் ஊதியங்கள் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்களின் படிகளைத் திருத்தியமைத்தல்

- பிரதம நீதியரசர் மற்றும் உச்ச நீதிமன்ற் நீதிபதிகளின் சம்பளம் மற்றும் படிகளைத் திருத்தியமைத்தல்.

- ஹைட்ரோபுளோரோகாபனைக் (Hydroflurocarbons – HFC) கட்டங் கட்டமாக கட்டுப்படுத்தல் தொடர்பாக மொன்ட்ரியல் அமைப்பு மேற்கொண்ட கிகாலி திருத்தத்துடன் இணங்கிச் செயற்படல்.

- சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்

- காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகளைச் செலுத்துதல்

- கணக்காய்வாளர் நாயகம் எச் எம் காமினி விஜேசிங்க அவர்களின் சம்பளத்தைத் தீர்மானித்தல்

### 4.1.3. சட்ட அலுவல்களுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பு அலுவல்கள்

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக பல்வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமாக சட்டரீதியான வரைவுகளை தயாரிக்கும் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதனையும் பிரதம அமைச்சர் அலுவலகம் மேற்கொள்கிறது. இங்கு பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பான அடிப்படை சட்ட வரைவுகளை தயாரிப்பது முதல் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் வரையான முழுச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்புப் பணிகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைவாக, 2018 ஆரம்பம் முதல் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையான வரையான காலப்பகுதியினுள் கீழ்வரும் சட்டங்களை வலுப்பெறச் செய்வதற்கு ஏற்புடைய ஒருங்கிணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **2018 இன் 05 ஆம் இலக்க வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைத்து நபர்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச இணக்கச் சட்டம்**

  2018 மார்ச் 21 ஆந் திகதி வலுப்பெறச் செய்யப்பட்ட 2018 இன் 05 ஆம் இலக்க வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச இணக்கச் சட்டத்தின் ஊடாக வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச இணக்கச் சட்டத்தை வலுப்பெறச் செய்யவும், வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்படுதலால் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை நிலைநாட்டுதல் மற்றும் இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்**

  2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வலுப்பெறச் செய்யப்பட்ட தேசிய கணக்காய்வுச் சட்டம் ஊடாக கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பணிகள் தொடர்பான ஏற்பாடுகள், தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையைத் தாபித்தல், அரச நிதி தொடர்பாக கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைப் பொறுப்புக்களைக் குறித்துரைத்தல் என்பவற்றுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம் தொடர்பான சட்டமூலம்**

  2018 ஒக்டோபர் 22 ஆந் திகதி முதல் வலுப்பெறும் 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய சட்டத்தின் ஊடாக இழப்புக்கான எதிரீடுகள் அலுவலகத்தைத் தாபிப்பதற்கு மற்றும் இழப்புக்கான எதிரீடுகளுக்குத் தகுதியான பாதிக்கப்பட்ட ஆட்களை இனங்காண்பதற்கும் அந்த ஆட்களுக்குத் தனியாக / அல்லது கூட்டாகவும் இழப்புக்கான எதிரீடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்**

  பயங்கரவாதம் வாதம் மற்றும் பயங்கரவாதம் சார்ந்த ஏனைய தவறுகளை விட்டும் இலங்கை மற்றும் இலங்கை மக்களைப் பாதுகாத்தல், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படும் பயங்கரவாதம் வாதம் மற்றும் பயங்கரவாதம் சார்ந்த ஏனைய தவறுகளைத் தடுத்தல், இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்திற்கு தயாராவதற்கு இலங்கை பூமி மற்றும் அதன் மக்களைப் பயன்படுத்துவதைத் தடுத்தல், பயங்கரவாத செயற்பாடுகள் மற்றும் பயங்கரவாதம் சார்ந்த ஏனைய தவறுகளை வெளிப்படுத்திக் கொள்ளுதல், பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதம் சார்ந்த ஏனைய ஏதாவது தவறினைச் செய்துள்ள யாராவது நபரை இனங்காணுதல், பிடித்தல், சிறைப்படுத்தல், கைது செய்தல், தடுத்து வைத்தல், விசாரணைகளை நடாத்துதல், வழக்குத் தொடர்தல் மற்றும் தண்டனை வழங்குதல் என்பவற்றுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு மற்றும் 1979 இன் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை (தற்காலிக ஏற்பாடுகள்) நீக்குவதற்கும் ஏற்பாடுகளை வழங்கும் சட்டமூலமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் 2018.09.17 ஆந் திகதி அரச வர்த்தமானியில் பிரசுரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு வெளிநாட்டமைச்சுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தைத் தாபிப்பதற்கான சட்டமூலம்**

  பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சேவைகள் மற்றும் வசதிகளை வழங்கும் அடிப்படை நோக்கத்துடன் பாராளுமன்ற வரவுசெலவுத் திட்ட அலுவலகத்தைத் தாபிப்பதற்குத் தேவையான அடிப்படைச் சட்டக் கட்டமைப்பொன்றை வரைவு செய்வதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்**

  காணி மற்றும் பாரளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சுடன் இணைந்து மிகவும் வினைத்திறன் மிக்க காணி முகாமைத்துவமொன்றை அடைந்து கொள்வதற்கான தேசிய கொள்கையொன்றுக்காக அரச காணிகளை ஒன்றிணைப்பதற்கு காணி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கொடைகளை வழங்கும் செயற்பாட்டினை மிகவும் வினைத்திறனாக, முறையாக ஒழுங்கமைத்தல் நோக்குடன் அனுமதிப்பத்திரங்கள், கொடைகள் அல்லது அரச காணிகளை வழங்கும் செயற்பாட்டின் கீழ் அரச காணி உரிமையாளர்களுக்கு நிலையான காணி உறுதிகளை வழங்குவதற்கான முறையான சட்டரீதியான சட்டகமொன்றைத் தயாரிப்பதற்கு இந்த சட்டமூலம் தயாரிக்கப்படுகிறது.

- **அரச காணி வங்கிச் சட்டமூலம்**

  அரசிடம் காணப்படும் அல்லது கையகப்படுத்தியுள்ள அல்லது அரச நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படும் முழுமையான அரச காணிகள் தொடர்பான ஆவணமொன்றைத் தயாரிப்பதற்கும், அந்த காணிகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச காணி வங்கியொன்றைத் தாபிப்பதற்கும் அதற்கான முறையான சட்டரீதியான சட்டகமொன்றைத் தயாரிப்பதற்கும் காணி மற்றும் பாரளுமன்றமறுசீரமைப்பு அமைச்சுடன் இணைந்து இந்த சட்டமூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 4.1.4. வழக்குகள் தொடர்பான அலுவல்கள்

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மற்றும் ரீட் வழக்குகள் தொடர்பாக பிரதம அமைச்சரைப் பிரதிவாதியாக்கி தொடரப்பட்டுள்ள வழக்கு அலுவல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதும் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைய, 2018 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கீழுள்ள வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றம் - அடிப்படை உரிமை வழக்குகள் 30

மேன்முறையீட்டு நீதிமன்றம் - ரிட் வழக்குகள் 08

### 4.1.5. பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் அளித்தல்

பிரதம அமைச்சர் அவர்களினால் ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஏற்புடையனவாக எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களினால் பிரதம அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட 2018 ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதியினுள் வினவப்பட்ட பத்து (10) வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

- ஜனாதிபதியின் விடயப் பரப்பிற்குட்படும் மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்புக்களுக்குட்படும் விடயங்கள் சம்பந்தமாக வினவப்பட்ட 08 வாய் மூலமான வினாக்களுக்கு பதில் வரையப்பட்டுள்ளன.

- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்புடைய மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக வினவப்பட்ட இரண்டு (02) வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

  பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் பிரதம அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட பத்து (10) வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

  தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக அனைத்து மாதங்களிலும் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் முதலாது புதன் கிழமை பிரதம அமைச்சரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பின் கீழ் வாய்மூலமான வினாக்கள் 04 க்குப் பதில்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய 2018.09.30 ஆந் திகதி வரை பதினொரு (11) வாய்மூலமான வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

- சபை ஒத்திவைப்புப் 09 பிரேரணைகளுக்கு பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

### 4.1.6. ஆண்டறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல்

ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், விசேடமாக வருடாந்த அறிக்கைகள், செயற்றிறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது வரைக்கும் கீழுள்ள விடயங்களின் கீழ் 27 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

- **வருடாந்த அறிக்கைகள்**
  - i. தேசிய நிதி ஆணைக்குழு -2016
  - ii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு -2014 – 2015
  - iii. ரணவிரு சேவைகள் அதிகாரசபை -2014
  - iv. ரணவிரு சேவைகள் அதிகாரசபை -2015
  - v. தேசிய பெறுகைகள் ஆணைக்குழு -2016
  - vi. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு - 2017

- **முன்னேற்ற அறிக்கைகள்**
  - i. எல்லை நிர்ணய ஆணைக்குழு -2017

- **காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்**
  - i. அரச சேவை ஆணைக்குழு - முதலாவது காலாண்டு அறிக்கை (2018.01.01-2018.03.31)
  - ii. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு இரண்டாவது காலாண்டு அறிக்கை (2018.04.01 - 2018.06.30)
  - iii. அரச சேவை ஆணைக்குழு - இரண்டாவது காலாண்டு அறிக்கை (2018.04.01- 2018.06.30)

- **செயற்திறன் அறிக்கைகள்**
  - i. தேர்தல் ஆணைக்குழு - 2017

- **செயற்திறன் அறிக்கைகள் மற்றும் நிதியறிக்கைகள்**
  - i. அரச சேவை ஆணைக்குழு - 2017

- **வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்கு அறிக்கைகள்**
  - i. நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் - 2016
  - ii. நீதிச் சேவை ஆணைக்குழு - 2016
  - iii. இலங்கை மன்றக் கல்லூரி - 2012 – 2015
  - iv. தேசிய கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு - 2016
  - v. இலங்கை மன்றக் கல்லூரி - 2017

vi. தேசிய பெறுகைகள் ஆணைக்குழு - 2016

vii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு -2016

நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் சுயாதீன ஆணைக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தலின் கீழ் கீழுள்ள அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

i. ஜனாதிபதி அலுவலகம்
ii. பிரதம அமைச்சர் அலுவலகம்
iii. நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்
iv. மனித உரிமைகள் ஆணைக்குழு
v. தேர்தல் ஆணைக்குழு
vi. நிதி ஆணைக்குழு
vii. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
viii. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

# 05. தேசிய நல்லிணக்கம், ஊழியர் நலனோம்புகை மற்றும் மத அலுவல்கள்

## 5.1 தேசிய நல்லிணக்கம்

### 5.1.1. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம்

அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கமைய, 2015 ஆம் ஆண்டில் நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் அடிப்படைய நோக்கம், இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகளுடன் தொடர்பான தீர்மானங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாகும்.

**நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தின் நோக்கங்கள்:**

(1) இடைக்கால நீதிப் பொறிமுறையை செயற்படுத்தல்
(2) மீண்டும் நிகழாமை மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை இலகுபடுத்தல்
(3) ஆற்றல் விருத்தி
(4) தொடர்பாடல் மற்றும் அணுகுமுறை
(5) ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளரின் இணக்கப்பாட்டு இலக்கம்: 30/1 மற்றும் 34/1 உடன் இணைந்து செயற்படுவதனை உறுதிப்படுத்தல்

**நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்:**

**1. இலங்கையில் இடைக்கால நீதிப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தல்**

**1.1. காணாமற்போனோர் சம்பந்தமான அலுவலகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்**

மன்னார், மாத்தறை, முல்லைத்தீவு, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் பிராந்திய வெளிவாரியான அணுகுமுறை / உளவள ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் (06 ஆலோசனைகள் அமர்வுகள்) நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் ''இல்லாதிருத்தல் சான்றிதழ்'' (Certificate of Absence) வெளியிடுவதற்கு உதவி புரிதல்.

**1.2. இழப்பீடு ஈடுசெய்தல் சட்டத்திற்கான அலுவலகத்துடனான ஒருங்கிணைப்பு**

இழப்பீடு ஈடுசெய்தல் அலுவலக சட்டமூலம் 2018 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரித்துக்கொள்ளப்படவுள்ளது.

**1.3. இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்**

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு எண்ணக்கருத்தியல் பத்திரம்/ சட்டமூலத்தை வரையும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன் அது 2018 செப்டெம்பர் 25 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

## 2. இராணுவத்துடனான கலந்துரையாடல்கள்

நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தினால் இலங்கையின் மோதல் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளுடன் தொடர்பான இராணுவத்தின் அலுவல்கள் தொடர்பான சரியான தெளிவுடன் அரச பாதுகாப்புத்துறை தொடர்பில் இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் தெளிவு மற்றும் அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் இராணுவத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. (பயிற்சியளிப்பவர்களுக்கான குழாமுக்கு 05 நாள் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று மலேசியாவில் நடாத்தப்பட்டது.)

மேலும் கிளிநொச்சி, திருகோணமலை, யாழ்ப்பாணம், இரத்மலானை, களுத்துறை மற்றும் கட்டுநாயக்க போன்ற இடங்களில் 09 இராணுவத்துடனான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

## 3. “அஹன்ன (செவிமடுங்கள்)” நிகழ்ச்சித் திட்டம்

அரசாங்கத்தின் நல்லிணக்க வேலைத் திட்டத்தை பொது மக்களிடம் கொண்டுசெல்வதற்கு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் பங்கேற்புடன் “அஹன்ன (செவிமடுங்கள்)” நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல். நல்லிணக்கத்தை விருத்தி செய்வதற்காக 44 நகரங்களில் மற்றும் 10 பாடசாலைகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

## 4. ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக இடைக்கால நீதி சம்பந்தமான கலந்துரையாடல்கள் மற்றும் அறிவைப் பரிமாறிக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2018 ஜூலை மாதம் நடாத்தப்பட்டது.

இது தவிர இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சட்ட மா அதிபர் திணைக்களம், சட்ட உதவி ஆணைக் குழு, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் / சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தீர்ப்பு சபைகளுக்காக அவ்வாறான நிகழ்ச்சித் திட்டமொன்றை எதிர்காலத்தில் நடாத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 5. இடைக்கால நீதி சம்பந்தமான சட்ட ரீதியான சிக்கல்களின் அடிப்படையிலான பின்னூட்டல்

இலக்கம்: 30/1 கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணக்கப்பாட்டில் பட்டியலிடப்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பான முன்னேற்றம், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் சம்பந்தமான விடயங்களை இராணுவ அங்கத்தவர்களுக்கு எதிராக சுமத்தப்படும் பாலியல் வன்முறை குற்றச்சாட்டுக்கள், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான அச்சுறுத்தல்கள், பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் திருத்தம் பற்றிய முன்னேற்றம் மற்றும் அரசியலமைப்பு சபையின் முன்னேற்றம் சம்பந்தமான முன்னேற்றம் சம்பந்தமாக பின்னூட்டல் நடவடிக்கைகளை நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும்.

### 6. ஏனைய செயற்பாடுகள்

நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்பு செயலகம் 2018 ஜூலை மாதம் 2 - 6 வரை வடிவமைப்பு நிபுணர் லுவீ பிக்போர்ட் அவர்களின் இலங்கை விஜயத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. 2018 ஜனவரி 25 மற்றும் 2018 ஜூன் 20 ஆம் திகதி உதவி வழங்குபவர்களை அறிவுறுத்தும் அமர்வுகள் நடாத்தப்பட்டன. செயற்திறனை அடிப்படையாகக் கொண்ட நிதியீட்டுத் திட்டங்கள் மேற்பார்வைக் குழுக்களுக்கான கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ''என்டர்பிரைசஸ் ஸ்ரீ லங்கா'' நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. வட மாகாண அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நிதியீட்டல் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. தேசிய மனித உரிமைகள் செயல் திட்டம் (2017 - 2021) ஒருங்கிணைப்பு மற்றும் அந்த திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் உரிய முகவர் நிறுவனங்களுடன் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 5.2. ஊழியர் நலனோம்புகை

பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் கீழ்வரும் நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### 5.2.1. இரத்தம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

தேசிய இரத்தப் பரிமாற்றல் சேவையின் வருடாந்த இரத்தத் தேவையினை பூர்த்தி செய்தல் மீது அரச நிறுவனங்களுக்கு முன்மாதிரியை வழங்கி பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் நடாத்தப்படும் இரத்தம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் 2018.04.05 ஆம் திகதி பிரதம அமைச்சர் அலுவலகக் கேட்போர்கூடத்தில் சிறப்பாக நடாத்தப்பட்டது.





### 5.2.2. நலனோம்புகை

பிரதம அமைச்சர் அலுவலக ஊழியர்களின் நலனோம்புகை நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் பிரதம அமைச்சர் அலுவலக நலன்புரி சங்கத்தின் நிதி நிலைமையை விருத்தி செய்துகொள்ளும் நோக்கில் பிரசித்திபெற்ற மேடை நாடக நடிகர் டெனிசன் குரே அவர்கள் நடிக்கும் "ரெலிய" மேடை நாடகம் 2018.08.31 ஆம் திகதி பிரதமர் மற்றும் பிரதமரின் ஆளணியின் பிரதானி மற்றும் கருத் திட்ட முகாமைத்துவம், இளைஞர் அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதம அமைச்சர் அலுவலக ஆளணியைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் உட்பட்ட ஏராளமான பார்வையாளர்களின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.







### 5.3. மதம் சார்ந்த நிகழ்ச்சிகள்

பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களுக்கிடையே சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அனைத்து சமயங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஓர் பிரதான சமய நிகழ்வொன்றை பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய ரீதியாக கொண்டாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் மதம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.


#### 5.3.1. தைப்பொங்கல் பண்டிகை

தைப்பொங்கல் பண்டிகை 2018 ஜனவரி 15 ஆம் திகதி, கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அலரி மாளிகையில் கொண்டாடப்பட்டது. இந்த வைபவத்தில் எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.









### 5.3.2. கொழும்பு நவம் மகா பெரஹரா

கொழும்பு, கங்காராம விகாரை மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகம் என்பவற்றினால் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட கொழும்பு நவம் மகா பெரஹரா 2018 மார்ச் மாதம் 01 ஆம் திகதி மிகவும் விமர்சையாக, கொழும்பு நகர் முழுவதும் ஒளி பரப்பிய வண்ணம் வீதி வலம் வந்தது.

75 யானைகள் பங்குபற்றி இந்த நவம் பெரஹராவினை அலங்கரித்ததுடன், மேல் நாட்டு, கீழ்நாட்டு மற்றும் சப்ரகமுவ கலை சம்பிரதாயங்களுக்குரிய நாட்டிய நிகழ்வுகள் மற்றும் ஏனைய அலங்காரம் மிக்க பல நாட்டியங்களில் கிட்டத்தட்ட 4000 கலைஞர்கள் பங்குபற்றினர்.

பெரஹராவின் ஆரம்ப தினமான 2018 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதி தாதுப் பேழையை மங்கள எனும் கொம்பன் யானை மீது வைத்து பெரஹரா நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பெரஹராவைப் பார்வையிட இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்திருந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிக எண்ணிக்கையானோருக்குப் பெரஹராவைப் பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறே இந்தப் பெரஹரா உள்நாட்டுக் கலைஞர்களின் திறமைகளை உலகிற்கு எடுத்தியம்புவதற்கும் அந்தக் கலை சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் அரிய சந்தர்ப்பமாய் அமைந்தது.



### 5.3.3. புனித தாதுப் பொருட்கள் உட்பட பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்கள் காட்சிப்படுத்தல்

பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் கொழும்பு கங்காராம விகாரை என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்தியாவின் சாரானாத் நகரின் மூலகண்டகுடி விஹாரையில் வைக்கப்பட்டிருக்கும் புனித தாதுக்கள், பாகிஸ்தானின் தக்ஷிலா புனித தாதுக்கள், நீலகிரி புனித தாதுக்கள் நேபாள் மற்றும் பூட்டானின் தொல்பொருளியல் பெறுமதிமிக்க பொருட்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தல் நிகழ்வு 2018 ஏப்ரல்  ஆந் திகதி முதல் மே மாதம் 02 ஆந்

திகதி வரை அலரி மாளிகையில் நடைபெற்றது.இந்தக் காட்சிப்படுத்தல் நிகழ்வு 2018 ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் மற்றும் கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பிரமுகர்களின் பங்கேற்புடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சிக்குத் தொல்பொருளியல் திணைக்களம், கல்வியமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, நாரத பௌத்த மத்திய நிலையம், மத்திய கலாச்சார நிதியம், தேசிய அருங்காட்சியகத் திணைக்களம், தேசிய சுவடிக் கூடத் திணைக்களம், பௌத்த அலுவல்கள் திணைக்களம், தேசிய அருஙகலைகள் பேரவை, கைவிணைப் பொருட்கள் சபை (லக்சல), தேசிய அலங்கார மத்திய நிலையம், ஆயர்வேதத் திணைக்களம், நுண்கலை கற்கைகள் பல்கலைக்கழகம், மேல், மத்திய, ஊவா, தென், வடமேல், சப்ரகமுவ மாகாண சபைகளின் கலாச்சார அமைச்சுக்கள் என்பவற்றினால் காட்சிப் பொருட்கள் வழங்கப்பட்டன

இந்தக் கண்காட்சிளைப் பார்வையிடுவதற்கு ஏராளமானோர் வருகை தந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் அதிகமானோருக்குப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வாறே தாதுப் பொருட்கள் உட்பட இவ்வாறான பௌத்த தொல்பொருளியல் பெறுமதி மிக்க பொருட்களின் தொகுதியை ஒரே இடத்தில் காண்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

பிரதம அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் குறிப்பிட்ட மாவட்டங்களின் விஹாரைகளின் தலைமை தேரர்களின் பங்களிப்புடன் 2018 மே 03 முதல் 16 வரை களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல், அனுராதபுரம், கண்டி மற்றும் கொழும்பு போன்ற மாவட்டங்கிள் உள்ளடக்கப்படும் வகையில் மாவட்ட அடிப்படையில் பாகிஸ்தானின் தக்ஷிலா புனித தாதுக்கள் காட்சிப்படுத்தப்பட்டன.







**5.3.4. புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவம்**

பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் கங்காராமை விகாரை என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புத்த ரஷ்மி வெசாக் வைபவம் 2018 ஏப்ரல் 29 ஆந் திகதி முதல் மே 02 ஆந் திகதி வரை கங்காராமை விகாரை, அலரி மாளிகை, பேரே வாவி என்பவற்றைச் அண்டிய பகுதிகளில் வெகு விமரிசையாக நடாத்தப்பட்டது.

புத்த ரஷ்மி தேசிய வெசாக் வைபவத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில், மற்றும் கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.

அவ்வாறே இந்த வெசாக் வலயம் பேரே வாவியின் தண்ணீர் மேற்பரப்பு மீது நிர்மாணிக்கப்பட்ட விசேட வெசாக் நிர்மாணங்கள், பௌத்த பக்தி கீத அரங்கேற்றம், பௌத்த நாடக அரங்கேற்றம், பௌத்த ஜாதகக் கதைகள் ஊடாக முன்வைக்கப்பட் வீதி நாட்டியங்கள், வெசாக் தோரணைகள் போன்ற பல அம்சங்கள் நிறைந்த பாரிய சமய, கலாச்சார நிகழ்வாக அமைந்தது.

புத்த ரஷ்மி வெசாக் வலயத்தைக் காண்பதற்காக இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் ஒளி பரப்பப்பட்டது. இது தேசிய படைப்பாளிகளின் திறமைகளை உலகுக்கு எடுத்துக் கூறவும், தேசிய கலை சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கும் அரிய சந்தர்ப்பமாக அமைந்தது.









### 5.3.5. கொள்ளுப்பிட்டி, வாலுக்காராம விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா

மதங்களுக்கிடையிலான சகவாழ்வின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கொள்ளுப்பிட்டி, வாலுக்காராம விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா 55 ஆவது தடவையாகவும் 2018 செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த பெரஹராவினை பார்வையிட்டனர். விமர்சையாகக் கொண்டாடப்பட்ட இந்தப் பெரஹரா அதிகளவிலான கொம்பன் யானைகள், மேல் நாட்டு, கீழ்நாட்டு மற்றும் சப்ரகமுவ கலை சம்பிரதாயங்களுக்குரிய நாட்டிய நிகழ்வுகள் மற்றும் ஏனைய அலங்காரம் மிக்க பல நாட்டியங்களைக் கொண்டமைந்திருந்தது.

இந்தப் பெரஹராவைப் பார்வையிட இலட்சக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தந்திருந்ததுடன், தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் ஒளி பரப்பப்பட்டது.





### 5.3.6. இப்தார் வைபவம்

இஸ்லாமிய பக்தர்கள் மிகுந்த பக்தியுடன் கொண்டாடும் இப்தார் நிகழ்வு கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் 2018 ஜூன் மாதம் 05 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், மௌலவிமார் மற்றும் இஸ்லாம் பக்தர்கள் சுமார் 1300 பேரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.







# 06. பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

## 6.1. பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் அடிப்படை நோக்கத்தை முன்னிறுத்தி இப்பிரிவு நடாத்திச் செல்லப்படுகிறது.

பிரதம அமைச்சரின் செயலாளரது நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படும் இந்தப் பிரிவு பிரதம அமைச்சரின் ஆலோசகர் (பொதுசன தொடர்புகள்) இருவர் மற்றும் பணிப்பாளர் ஒருவரின் மற்றும் சுமார் 25 பேர்களைக் கொண்ட ஆளணி அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

நாட்டின் அனைத்து அரச நிறுவனங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் பொது மக்கள் முறைப்பாடுகள் மற்றும் சேவைகளுக்கான கோரிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் இந்தப் பிரிவின் அலுவலாகும். அத்துடன் குறிப்பிட்ட பொது மக்களின் கோரிக்கைகள், தேவைகளை உரிய நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ளல் சம்பந்தமான முன்னேற்றத்தை நிதமும் வினவி, குறிப்பிட்ட பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றல் சம்பந்தமான பின்னூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. இது தவிர அரச நிறுவனங்களில் பொதுசன தொடர்புகள் அலுவல்கள் சம்பந்தமான ஆற்றல்களை மேம்படுத்தல், வசதிகளை மேம்படுத்தல், பொதுசனத் தொடர்புகள் மூலோபாயங்களை பலப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக இப் பிரிவின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

<u>**குறிக்கோள்கள்:**</u>

- சேவை வழங்கலை வினைத்திறன் மற்றும் முறைப்படுத்தல் சம்பந்தமான கவனத்தை அதிகரித்தல்.
- பொதுமக்கள் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்
- அரச துறையில் பொதுசன தொடர்புகள் பிரச்சினைகள் தீர்வுகள் சம்பந்தமாக முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
- பொது மக்கள் தொடர்புகள், பிரச்சினைகளை தீர்த்தல் பிரவேசத்தின் மதிப்பீட்டு செயற்பாட்டை முறையாக வழிநடாத்தல்
- அரச நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், அரசியல் சார்ந்த நிறுவனங்கள், பொது மக்கள் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்துகொள்வதற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல், அந்த ஆற்றல் மற்றும் திறமையை மேம்படுத்தல்
- பொது மக்களுக்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை அறிமுகஞ் செய்தல்

- பொது மக்கள் தொடர்புகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தகவல் தொழில்நுட்பத் தொடர்புகளை இனங் காணல் மற்றும் பலப்படுத்தல்
- பங்கேற்பு அபிவிருத்தி அணுகுமுறைகள், உரையாடல்கள் மற்றம் தொடர்பாடல்கள் ஊடாக பிரஜைகளின் பலத்தை மேம்படுத்தல், பிரஜைகளின் பங்கேற்பை உறுதி செய்யும் அணுகுமுறைகளை அறிமுகஞ் செய்தல்
- பொது மக்கள் சேவைகளின் முன்னேற்றம் மற்றும் இலகுபடுத்துவதற்காக தொழில் சார்ந்த துறைகளைப் பலப்படுத்தல் மற்றம் மூலோபாயங்களை அறிமுகஞ் செய்தல்

<u>**மூலோபாயங்கள்**</u>

- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் பொதுசன தொடர்புகள் பிரிவொன்றை அமைத்தல் மற்றும் அதனூடாக பொது மக்களுக்கு தமது பிரச்சினைகளை இலகுவான முறையில் முன்வைப்பதற்கான வசதியான இடமொன்றை தயார் செய்தல்
- ஏனைய அரச நிறுவனங்களுடன் பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம் பேணி வரும் தொடர்புகளை பலப்படுத்துவதற்காக அனைத்து பிரதான அரச நிறுவனங்களும் தொடர்புபடும் வகையில் பொதுசன தொடர்பு பிரிவுகள் குழுக்களை ( Public Relation Cell) அமைத்தல்
- பொது மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரச துறையின் பொறுப்புக்கூறல் (Responsiveness) மற்றும் பொறுப்பை (Responsibility) உறுதி செய்தல், பின்னூட்டல் முறைகளை அறிமுகஞ் செய்தல் ஊடாக பொது மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்தல் சம்பந்தமாக மீளாய்வுக்குட்படுத்த முடியுமான முறையான பொறிமுறையொன்றை அறிமுகஞ் செய்தல்
- பொது மக்கள் பிரச்சினை சம்பந்தமான விடயங்களை வகைப்படுத்தி இனங்காணல் ஊடாக பிரச்சினைகள் பகுப்பாய்வு அணுகுமுறை ஊடாக பொதுவாக அவ்வாறான பிரச்சினைகளை குறைப்பதற்காக கொள்கை சாரந்த தொடர்புகளை ஏற்படுத்தல்
- பொது மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தகவல் தொழில்நுட்ப கருவியொன்றை அறிமுகஞ் செய்தல் மற்றும் எதிர்காலத்தில் அந்த தகவல் தொழில்நுட்ப முறையை நிறுவன ரீதியாக வலையமைப்புக்குட்படுத்துவதன் உடாக மிக விரைவில் பிரச்சினைகளை தீர்க்கும் அணுகுமுறையொன்றை விருத்தி செய்தல்
- பொது மக்கள் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தேவையான முகாமைத்துவ மற்றும் கொள்கை ரீதியிலான உரையாடல்களை எற்படுத்தல் ஊடாக பல்வேறு மூலோபாயங்களை அறிமுகஞ் செய்தல்

**முன்வைக்கப்பட்ட பொது மக்களின் தேவைகள் / முறைப்பாடுகள் மற்றும் அவை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றம்**

| **மாதம்** | **கிடைக்கப்பெற்ற கடிதங்களின் மொத்த எண்ணிக்கை** | **அனுப்பப்பட்ட பதில்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| ஜனவரி | 4,739 | 2,956 |
| பெப்ரவரி | 3,069 | 1,458 |
| மார்ச் | 3,974 | 2,510 |
| ஏப்ரல் | 3,057 | 1,925 |
| மே | 5,446 | 3,374 |
| ஜூன் | 2,534 | 1,831 |
| ஜூலை | 5,238 | 3,432 |
| ஆகஸ்ட் | 5,633 | 3,649 |
| செப்டெம்பர் | 4,172 | 2,794 |
| ஒக்டோபர் | 3,525 | 2503 |
| நவம்பர் | 2,544 | 2129 |
| டிசம்பர் | 2,375 | 2082 |
| **மொத்தம்** | **46,306** | **30,643** |

**சாராம்சம்**

பதில் வழங்கிய மொத்தக் கடிதங்களின் எண்ணிக்கை - 30643

பெற்றுக்கொண்ட பதில் கடிதங்களின் எண்ணிக்கை - 8777

பிரதிகளாக கோப்புச் செய்யப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை - 6200

2018.12.31 ஆந் திகதியன்று பதில் அனுப்ப வேண்டியுள்ள கடிதங்கள் - 686

**கிடைத்த மொத்தக் கடிதங்களின் எண்ணிக்கை - 46,306**

பொதுசன முறைப்பாடுகளுக்குப் பதில்களை அனுப்புவதற்கு எடுக்கும் காலத்திற்கு (நாட்கள்) ஏற்ப முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளதுடன், தகவல் தொழிநுட்பததைப் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஒரு நாளில் பதில்களை அனுப்ப எதிர்பார்க்கப்படுகிறது.

| கட்டம் | பதில்களை அனுப்ப எடுத்த நாட்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆரம்ப கட்டம் | 10 நாட்கள் |
| 2 ஆவது கட்டம் | 9.05 நாட்கள் |
| 3 ஆவது கட்டம் | 4.38 நாட்கள் |
| 4 ஆவது கட்டம் | 3.38 நாட்கள் |
| எதிர்பார்க்கும் முன்னேற்றம் | ஒரு நாள் சேவை |

**எதிர் காலத் திட்டங்கள்**


- **இணையத்தள வசதிகளை பலப்படுத்தல்**
  இணையத்தள வசதிகள் ஊடாக பொது மக்கள் பிரச்சினையைத் தீர்க்கும் கட்டமைப்பொன்றை தாபித்தல். அதனூடாக இலத்திரனியல் தொழில்நுட்ப வசதிகளின் ஊடாக உரிய நிறுவனங்களுடன் நிலவும் தொடர்புகளை பலப்படுத்தல் மற்றும் பிரச்சினைகளை இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக ஒருங்கிணைத்தல்

- **பொதுசன தொடர்பு வலையமைப்பை தாபித்தல்**
  பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் வலையமைப்பை இனங்காணல், சகல நிறுவனங்களிலும் பொதுசன தொடர்புகள் பிரிவை தாபித்தல் ஊடாக அரச பிரிவின் பொதுசன தொடர்புகளை மேலும் பலப்படுத்தல்

- **பிரஜைகள் மற்றும் பொது மக்கள் பட்டயத்தை அறிமுகஞ் செய்தல்**
  பொது மக்கள் சேவைகளை மிகவும் முறையாக மற்றும் வினைத்திறனுடன் மற்றும் பொறுப்புக்கூறலுடன் மேற்கொள்ளல் சம்பந்தமான கொள்கைகள் உட்பட பொது மக்கள் பட்டய நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகஞ் செய்தல் மற்றும் பொது மக்கள் சேவைகளை வழங்கல் சம்பந்தமாக தரப்படுத்தலை ஏற்படுத்தல்

- **தொழிற் சங்கத் தொடர்புகளை பலப்படுத்தல்**
  நிறுவன ரீதியிலான சேவைகளை வழங்குவதற்காக தொழிற் சங்கங்களுடனான தொடர்புகள் ஊடாக நிறுவனம் சார்ந்த மற்றும் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய மூலோபாயங்களை இனங்காணல். பொது மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்குத் தடையாகக் காணப்படும் தொழிற் சங்க நடவடிக்கைகளைக் குறைப்பதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் இயலளவை அபிவிருத்தி செய்தல்.

### 6.2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பொது மக்களின் முறைப்பாடுகள் / குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள்



# 07. தாபன அலுவல்கள்

## 7.1. மனித வளங்கள் அபிவிருத்தி

பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்களின் அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கை விருத்தி செய்வதன் ஊடாக அலுவலக நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க, பயன்மிக்க மற்றும் தரமான வகையில் மேற்கொள்வதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்கு உத்தியோகத்தர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள். அதற்கமைய, 2018.01.01 முதல் 2018.12.31 வரையிலான காலப் பகுதிக்குள் வழங்கப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகள் பற்றிய விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- **உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்கள்**

| இலக்கம் | பாடநெறியின் பெயர் | பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் கால எல்லை | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | கனிஷ்ட நிறைவேற்று அலுவலர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2018.01.04 முதல் 10 வாரங்கள் | 05 |
| 2 | IELTS க்கான ஆங்கிலம் | பிரித்தானியக் கவுன்சில் | 50 மணித்தியாலங்கள் | 01 |
| 3 | தொழில் எதிர்பார்ப்போருக்கான ஆங்கிலப் பாடநெறி | மிலோதா நிறுவனம் | 10 வாரங்கள் | 02 |
| 4 | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகளை எழுதுதல் | மிலோதா நிறுவனம் | 2018.01.29 – 2018.01.30 | 01 |
| 5 | கோப்பு முகாமைத்துவம் மற்றும் அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன விதிக்கோவை தொடர்பான பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2018.02.21- 2018.02.23 | 01 |
| 6 | MS Excel பாடநெறி | PRAG நிறுவனம் | 2018.02.21- 2018.02.22 | 01 |
| 7 | பிரதேச அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பான பட்டப்பின் பட்டம் | கொழும்பு பல்கலைக்கழகம் | 1 வருடம் | 01 |
| 8 | Payroll பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2018.02.26 – 2018.02.28 | 03 |
| 9 | அறிக்கைகள் எழுதும் திறன் தொடர்பான அடிப்படைப் பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2018.03.21 – 2018.03.23 | 01 |
| 10 | அரச மூலோபாயங்கள் மற்றும் உலகத் தொடர்புகள் தொடர்பான டிப்ளோமா பாடநெறி | பண்டாரநாயக்க சர்வதேச பயிற்சி நிலையம் | 1 வருடம் | 01 |
| 11 | அரச முகாமைத்துவப் பட்டப்பின் பட்டம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம | 2016-2018 | 01 |

| இலக்கம் | பாடநெறியின் பெயர் | பயிற்சி நிறுவனம் | பயிற்சிக் கால எல்லை | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| 12 | கனிஷ்ட நிறைவேற்று அலுவலர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2018.04.26 முதல் 10 வாரங்கள் | 03 |
| 13 | கொள்முதல் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | மிலோதா நிறுவனம் | 2018.07.05 | 02 |
| 14 | தமிழ் மொழிப் பயிற்சிப் பாடநெறி | அரசகரும மொழிகள் திணைக்கள் | 2018.07.14 முதல் 50 மணித்தியாலங்கள் | 26 |
| 15 | கனிஷ்ட நிறைவேற்று அலுவலர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி | மிலோதா நிறுவனம் | 2018.09.03 முதல் 10 வாரங்கள் | 01 |
| 16 | சந்தர்ப்ப முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனம் | 2018.09.15 | 02 |
| 17 | சாரதிகளுக்கான மனப்பாங்கு மற்றும் தொழில் அபிவிருத்திச் செயலமர்வு | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | 2018.09.28 – 2018.09.29 | 11 |
| 18 | அலுவலக உதவியாளர்களுக்கான உபசரணை முகாமைத்துவம் தொடர்பான பாடநெறி | இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் | 2018.09.29 | 18 |
| 19 | வணிக நிர்வாகம் சம்பந்தமான முதுமாணிப் பட்டம் | கொழும்புப் பல்கலைக்கழகம் | 2018/2020 கல்வியாண்டு | 01 |
| 20 | அரச நிதிப் பிரமாணங்கள் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | மிலோதா நிறுவனம் | 2018.11.26 - 2018.11.28 | 01 |

- **வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள்**

| இலக்கம் | பாடநெறி | நாடு | பயிற்சிக் காலம் | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| 01 | அபிவிருத்தி ஆய்வு தொடர்பான பட்டம் | அவுஸ்திரேலியா | 2018.01.15-2019.07.31 | 01 |
| 02 | அபிவிருத்தி ஆய்வு தொடர்பான பட்டம் | அவுஸ்திரேலியா | 2018.01.15-2018.12.31 | 01 |
| 03 | டிஜிட்டல் பொருளாதாரத்தை இனங்காணல் | இந்தியா | 2018.02.21-2018.02.22 | 01 |

| இலக்கம் | பாடநெறி | நாடு | பயிற்சிக் காலம் | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 04 | ஆசியாவின் அனைத்துப் பொருளாதார கொள்கை வகுப்பாளர்களுக்கான நிறைவேற்று அலுவலர் பயிற்சிப் பாடநெறி | சிங்கப்பூர் | 2018.02.26-2018.03.26 | 01 |
| 05 | அரச சேவை 2030 வரை மற்றும் அதன் பிறகு | சிங்கப்பூர் | 2018.04.09-2018.04.13 | 01 |
| 06 | சுதந்திர வர்த்தக வலையங்கள் முகாமைத்துவம் தொடர்பான பாடநெறி | சீனா | 2018.04.18-2018.05.08 | 01 |
| 07 | பொருட்கள் மற்றும் சேவைகளின் சர்வதேச வர்த்தகம் | இந்தியா | 2018.05.14-2018.05.18 | 01 |
| 08 | ஒரே கரை, ஒரே வீதி எண்ணக்கருவின் கீழ் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அபிவிருத்தியை மேம்படுத்துவது தொடர்பான மாநாடு | சீனா | 2018.05.23-2018.06.12 | 03 |
| 09 | சமூக அடிப்படை மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான வருடாந்த சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி | தாய்லாந்து | 2018.06.04-2018.07.06 | 01 |
| 10 | MCC DCO தலைமைத்துவ மாநாடு | USA | 2018.06.25-2018.06.29 | 01 |
| 11 | நகர அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் பட்டம் | கொரியா | 2018.08.09-2020.01.12 | 01 |
| 12 | பாலின சமத்துவம் மற்றும் மகளிர் வலுவூட்டல் | தாய்லாந்து | 2018.09.30 2018.10.14 | 01 |
| 13 | சிறிய வர்த்தகங்களை அபிவிருத்தி தொடர்பான பயிற்சிப் பாடநெறி | இந்தியா | 2018.11.12-2018.12.21 | 01 |
| 14 | அரச செலவின முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | இந்தியா | 2018.11.26-2018.12.14 | 01 |

## 7.2. உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்

இ - அரச கொள்கைக்கு ஏற்றவாறு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளை இனங்கண்டு தீர்வுகளை வழங்குவதும், அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்குத் தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவின் அடிப்படை இலக்காகும்.

அதற்கேற்ப, கீழுள்ள தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பச் சேவைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம்**
  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை எப்போதும் இற்றைப்படுத்துவதன் மூலம் அதனைப் பயன்படுத்துவோருக்கு காலத்துகேற்ற, சரியான தகவல்கள் விரைவாக வழங்கப்படுகின்றன
- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் மின்னஞ்சல் சேவை**
  நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வரும் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக மின்னஞ்சல் சேவையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி மிகவும் நம்பகமான, உற்பத்தித் திறன் மிக்க மின்னஞ்சல் சேவையொன்றைப் பேணிச் செல்ல முடியுமானது.
- **தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு**
  அலரி மாளிகை வளவு மற்றும் பிரதம அமைச்சர் அலுவலக வளவு அலுவலகங்களில் உட்புற வலையமைப்புக் கட்டமைப்பினை Wi-Fi வசதியுடன் நவீனமயப்படுத்த முடியுமானது. அதன் ஊடாக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
- **பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளகப் பயன்பாட்டுக்கு மென்பொருள் அமைப்புக்களை உருவாக்குதல்**
  பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக தாபன அலுவல்களை இலகுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான மென்பொருள்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவினால் உருவாக்கப்படுகிறது. அதற்கமைய அமைச்சரவைப் பத்திரங்களின் தொடர் நடவடிக்கைக்காகத் தயாரிக்கப்பட்ட மென்பொருள் அமைப்பு இயங்கு நிலைக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் போக்குவரத்து அமைப்பினை முகாமைத்துவம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட மென்பொருள் அமைப்பொன்று பரீட்சார்த்த மட்டத்தில் செயற்படுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பிரதான பணிகளுக்கு மேலதிகமாக தேவைக்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகத்தின் தகவல் மற்றும் தொழிநுட்பத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்கிறது.

## 7.3. பணியாட் தொகுதி பிரதானி அலுவலகம்

இலக்கம்: 15/0004/602/001 மற்றும் 2015/01/21 ஆம் திகதிய மற்றும் இலக்கம்: 15/0044/602/008 மற்றும் 2015/02/05 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 15/1253/702/003 மற்றும் 2015/09/09 ஆம் தகதிய அமைச்சரவை அங்கீகாரங்களுக்கமைய பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் இந்தப் புதிய பிரிவு தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் கௌரவ சாகல ரத்னாயக்க அவர்கள் பணியாட் தொகுதியின் பிரதானியாக பணியாற்றியதுடன், 2015 ஆகஸ்ட் தேர்தலின் பின்னர் அவர் வகிக்கும் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக இந்தப் பதவியின் அலுவல்களையும் மேற்கொண்டு வருகின்றார். இந்தப் பணியாட் தொகுதிக்கு 30 அங்கத்தவர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட பணியாட் தொகுதிக்கு பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களது அலுவல்களை மேற்பார்வை செய்தல், அரசியல் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகளின் அலுவல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் தகவல் முகாமைத்துவம் சம்பந்தமாக பணியாட் தொகுதிப் பிரதானிக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த அலுவல்களுக்கு மேலதிகமாக கௌரவ பிரதமரின் தினக் குறிப்புக்களைப் பேணிவரல் மற்றும் பிரதமர் அவர்களை சந்திக்க வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் தொடர்பான அலுவல்களையும் மேற்கொள்கின்றார். அநேகமான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தேவையான விடயங்களை தெளிவுபடுத்துவதற்கான பிரதமரின் பிரதிநிதி என்ற வகையிலும் அலுவல்களை மேற்கொள்கின்றார்.

# 8. நிதிசார் முன்னேற்றம்

## 8.1. நிதிசார் முன்னேற்றம்

வருடாந்த அரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் செலவுத் தலைப்பு இலக்கம் 02 இன் கீழ் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதி ஏற்பாடு ஐந்து பிரதான கருத்திட்டங்கள் மற்றும் ஒரு உப கருத் திட்டத்தின் கீழ் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் என்ற ரீதியில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அதற்கமைய, 2018 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவாக ரூபா 1,128.6 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினமாக ரூபா 834.1 மில்லியன் என ரூபா 1,962.7 மில்லியன் மொத்த நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கருத் திட்டங்களின் கீழான நிதிசார் முன்னேற்றம் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| கருத் திட்டம் / உப கருத் திட்டம் | மொத்த நிதி ஏற்பாடு (ரூ. மில்.) | | நிதிசார் முன்னேற்றம் 2018.12.31 வரை (ரூ. மில்.) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதன | மீண்டெழும் | | மூலதன | |
| பிரதம அமைச்சர் அலுவலகம் | 449.6 | 297 | 403.9 | 89.8% | 74.7 | 25.1% |
| பொது நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள் | 281.3 | 24.1 | 257.2 | 91.3% | 16 | 66.3% |
| தேசிய ஊடக மத்திய நிலையம் | 43.5 | 8.0 | 34.9 | 80.2% | 0.3 | 3.7% |
| நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகம் | 261.4 | 5.0 | 124.6 | 47.6% | 1.5 | 30% |
| மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன செயற் திட்ட அலுவலகத்தை தாபித்தல் மற்றும் பேணிவரல் | 49.8 | 500 | 23.5 | 46.9% | - | - |
| ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தை கொழும்பு மற்றும் டோக்கியோவில் தாபித்தல் (உப கருத்திட்டம்) | 43.0 | - | 14.7 | 34.1% | - | - |
| **மொத்தம்** | **1,128.6** | **834.1** | **858.8** | **76.1%** | **92.5** | **11.1%** |

அதற்கமைய, ஐந்து பிரதான கருத்திட்டங்கள் மற்றும் ஒரு உப கருத் திட்டத்தின் கீழ் அலரி மாளிகை வளவு, விசும்பாய, நுவரெலியா மற்றும் பென்தோட்டையில் அமைந்துள்ள பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லங்கள், தேசிய ஊடக மத்திய நிலையம், நல்லிணக்கப் பொறிமுறை ஒருங்கிணைப்புச் செயலகம், ஜப்பான் - இலங்கை ஒன்றிணைந்த ஒத்துழைப்பு செயலகத்தை கொழும்பு மற்றும் டோக்கியோவில் தாபித்தல், மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன செயற் திட்ட அலுவலகத்தை தாபித்தல் மற்றும் பேணிவரல் போன்ற மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.